www.padippakam.com

# சிந்தனை மரா...





படிப்பகம்

www.padippakam.com

# சொல் + செயல் + சிந்தனை = பரா

இன்னும் எம்முடன் இருப்பார்
என்று நினைத்த
பராமாஸ்ரர் இன்று இல்லை
என்பதை நம்ப மறுக்கின்றது மனம்.
பதினொரு மணிக்குசந்திக்கவிருந்த
எமக்கு. ஒன்பது மணித்தகவல்
என்னை சிதயவைத்தது.



கறுப்பு வெள்ளை புகைப்படங்களா?
இலக்கியஅறிவா? அரசியல் அனுபவமா?
எல்லாவற்றையும் ஆழமாக அளவளாவிய
வெள்ளைமனதுக்காரா ...

சொல் செயல் சிந்தனை எல்லாம்
ஒன்றாயமைந்த பரா 72 வயதை 27ஆக்கி
முதுமையை எட்டி உதைத்த சின்னப்பொடியன்.
அவருடன் இயங்கிய
அனுபவம் அளப்பெரியது
எமக்கு தோழர் இல்லை
என்பது அநியாயமானது.
நண்பர் சிந்துவை தவிக்கவிட்டது
அதைவிட அநியாயமானது.

இவ்வளவு சீக்கிரமாகவே எங்களைவிட்டு
பிரிந்தது நியாயமில்லை.
ஆனாலும் நீங்கள் விட்டுச்
சென்ற சுவடுகள்
என்றென்றும் நிலையானது
ஒரு தந்தையை இழந்த உணர்வை
எமக்கு ஏற்படுத்தியிருக்கிறது.
கனத்த மனத்துடன் சிரித்த முகத்தானை
சந்தோஷமாக வழியனுப்ப முயற்சிப்போம்....

ஜெகா, சாந்தி
பேர்லின்
20.12.07

படிப்பகம்



# இனிய சாட்சியங்களின் நினைவாய்...

பரா, அர்த்தமுள்ள வாழ்வின் பக்கங்களில் உங்களை நாங்கள் சந்திக்கின்றோம். காட்டின் அமைதியிலும் நகர நெரிசல்களிலுங் கூட அழகின் சுகந்தத்தை உங்களால் காணமுடிந்தது. உழைப்பின் மகிமை அறிந்தவர் நீங்கள். உழைப்பாளர்களின் உரிமைக்காக, சிறுபான்மை இனங்களின் கௌரவத்திற்காக, தனிமனிதர்களின் சுயமரியாதைக்காக, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கப்பாட்டிற்காக, கிராமியக் கலைகளின் மேம்பாட்டிற்காக, நலிந்த விளிம்புநிலை மக்களிடம் இருக்கின்ற உன்னதக் கலை வெளிப்பாட்டிற்காக என்றெல்லாம் நீங்கள் „மெல்லெனப் பாயும் ஓடை கல்லையும் உருட்டிப் பாயும் என்பதற்கிணங்க உங்களால் முடிந்ததைச் செய்தீர்கள். பேர்லினில் நீங்கள் அங்கம் வகித்த அமைப்புக்கள், ஒழுங்குசெய்த சமூக, அரசியல், இலக்கிய, குறும்பட விழாக்களும் அவை பதித்துச் சென்ற சுவடுகளும் இனிச் சாட்சிகளாக அமைந்து நிற்கும். இரண்டாம் தலைமுறையினரை சமூக அக்கறை மிக்க மனிதர்களாக, இனவாதம், நிறவாதம், பாசிசம், குடும்ப அடக்கு முறை போன்றவற்றுக்கெல்லாம் எதிர் நிற்கக்கூடியவர்களாக வளர்த்தெடுக்க வேண்டுமென்ற பிரயத்தனங்கள் வீண்போகா. உங்கள் குழந்தையின் சிரிப்பும், ஒரு ஞானியின் அமைதியும், புரட்சியாளனின் கருத்து வீச்சும் நாங்கள் கண்டு அனுபவித்தவை. குறையொன்றும் இல்லை. செல்க நண்பனே...எங்களின், எங்கள் அர்த்தமுள்ள செயல்களின் வாழ் நண்பனே!!



-பேர்லின் தோழர்கள்-
27.12.07.

## "Ich kann nicht glauben"

Ich kann nicht glauben, dass du Heim gegangen bist. Ich kann es immer noch nicht begreifen. Ich will morgens aufstehen und denken, dass es einfach nur ein Traum ist und ich dich wieder sehen kann. Doch wenn ich in die Realität schaue, merke ich dass ich dich nie wieder sehen kann. Der 17.Dezember 2007 ist ein Tag, den ich gern rückgängig machen würde. Ich stand auf und hörte nur von meinen Eltern, dass du gestern Abend Abschied von uns genommen hast. Warum hattest du so eilig von uns zu gehen???? Wir hätten Weihnachten und Neujahr so toll und wunderschön in Berlin feiern können. Du hast mehrmals am Tag schon angerufen und wolltest wissen, wann wir genau in den Weihnachtsferien kommen. Du warst sehr fröhlich, als du hörtest, dass wir am 24.Dezember kommen. Du hättest nur eine Woche zu warten gehabt, aber du bist von uns gegangen. Wenn Alter für Dein Grund ist, dass du von uns gegangen bist, dann kann ich es nicht glauben. Wenn du krank warst und deshalb Abschied von uns genommen hast, dann kann ich es nicht glauben. Wenn du es gewollt hast von uns zu gehen, kann ich nicht glauben, da du ein Mensch bist, der sein Leben genossen hat. Ich werde dich immer in Erinnerung haben!

Bairave
Sivarajan

www.padippakam.com



## Sleep well Comrade

*பொ.கருணாகரமூர்த்தி*



Photo by Para

பதினேழு வருடங்கள் முன்னதாக பெர்லின் இலக்கியச்சந்திப்பில்தான் பராவை முதன்முறையாகப்பார்த்தேன். முதல் தோற்றத்தில் அவர் எனக்கு யாழ்ப்பாணத்துச் சனாதனத்தமிழர் ஒருவர் போலவே இருந்தார். பின்னாளில் அவரது செயற்பாடுகளை அவதானித்தபோது வானத்துக்கும் பூமிக்குமிடையேயான அனைத்துப் பிரச்சனைகளுள்ளும் தன்னைப்பொருத்திக்கொண்டு அவற்றுக்கான தீர்வை நோக்கிப்போராடும் மிகுபிரக்ஞையும், துடிப்பும், சிந்தனையுமுள்ள ஒரு இளைஞன் அவருக்குள் இருப்பது தெரியவந்தது. கடந்த பத்து ஆண்டுகளாக அவர் தனது வதிவிடமாக பெர்லினைக் கொண்டதிலிருந்து அவருடனான என் ஊடாட்டம் சற்றே அதிகமானது. இடதுசாரிஅரசியல் சம்பந்தமான ஆங்கிலச்சொல்லாடல்களில் எனக்கு அடிக்கடி மயக்கங்கள் ஏற்படும்போதெல்லாம் விளக்கங்கள் கோரி அவருக்குத்தான் மின்அஞ்சல் எழுதுவேன். மறுநாளே ஒரு நல்லாசிரியரைப்போல ஓர் சொற்களஞ்சியம் வழங்குவதைவிடவும் மிதமாக அச்சொல்லாடல்களுக்கு அதன் வேரிலிருந்தே விளக்கங்கள் தந்திருப்பார்.

இன்னும் அவரது மூன்று மொழிபேசும் ஆற்றலும் சளையாத உழைப்பும், தலைமை தாங்கும் இயல்பும் இலக்கியச்சந்திப்புகளுக்கு அப்பாலும் இங்கே தமிழ் சிங்கள சகோதரர்களை இணைக்கவும் கலந்துரையாடவும் எங்களுக்கெல்லாம் உதவியன.

திம்பு பேச்சுவார்த்தைகளை பெடியங்கள் முறிக்கவேண்டி வந்ததிலுள்ள நியாயத்தை அன்றே ஆமோதித்தவர் பரா. பின்னாளில் தமிழர் பிரச்சனைத் தீர்வுக்காக சர்வகட்சி மகாநாடொன்று கூட்டப்படுமென்றும், அதில் அனைத்துக்கட்சிகளும் சமர்ப்பிக்கும் தீர்வாலோசனைகள் பரிசீலிக்கப்படும் என்கிற அரசின் வாக்குறுதியிலும், Dr. திஸ்ஸ விதாரணவின் உத்தேசத் தீர்வுவரைவில் இருந்த நல்ல அம்சங்களால் அதன் மீது அதீத நம்பிக்கையும் உற்சாகமும் கொண்டிருந்தார். சமூகவியக்கத்தின் இயங்கியலை அதன் சரித்திரங்களோடும் இளமையிலேயே புரிந்துகொண்டவர் பரா. சிலருக்கு நல்ல வாழ்வியல் சித்தாந்தங்கள், தத்துவங்கள் எல்லாம் தெரிந்திருக்கும்- ஆனாலும் நடைமுறை வாழ்வில் அவற்றையெல்லாம் கடைப்பிடித்து வாழுதல் இயலாமல் போகும். இனத்தில், ஜாதிகளில், மொழிகளில் கலப்பினை ஏற்படுத்துவது அவற்றுக்கிடையேயான சமத்துவத்தை வளர்ப்பதற்கான முதற்படி என்பதை பரா இளமையிலேயே தெளிந்துகொண்டதால் துணிந்து தானும் மல்லிகாவைக் கலப்புத்திருமணம்செய்துகொண்டு வாழ்ந்து பெற்ற தன் குழந்தைச் செல்வங்களையும் அவ்வாறே வாழக்கற்றுக்கொடுத்த ஒரு மாமனிதன். வாழ்வின் அந்திம கணம்வரை துறுதுறுப்பாயிருந்து பாடல்களில்கூட துள்ளிசையையே விரும்பிக்கேட்ட அவரது உற்சாகத்தோற்றத்துடன் மரணத்தை எவராலும் இணைத்துச் சிந்தித்திருக்கவே முடியாது. பராவின் 'புன்சிரிப்பை' இனிமேல் பார்க்கமுடியாது, 'கிண்' குரலை இனிக்கேட்கமுடியாது என்கிற ஆயாசம் தவிப்பு எமக்குள் இருந்தாலும் தூங்க எப்போதும் அடம்பிடிக்கும் ஒரு குழந்தை திடீரென ஒருநாள் தனாகவே தூங்கப்போனதைப்போல யாருக்கும் எந்தக் கஷ்டமும் கொடுக்காது தானாகவே விரும்பிப்போய்த்தூங்கிவிட்டார். தோழருக்கு அதுதான் ஆனந்தம் என்றால் எமக்கும் அது ஆனந்தம்..... ஆனந்தமே !

படிப்பகம்

www.padippakam.com



பரா மாஸ்டரோடு பழகிய நினைவுகளுடன்.....

Photo by Para



இளமை முதுமை சிறியோர் பெரியோர் என்ற எந்த வரைமுறைகளுக்குள்ளும் அகப்படாமல் அற்புதமாகப் பழகும் ஒரு துடிப்பான இளைஞனை நாம் இழந்தது என்னளவில் பேரிழப்பாய்த் தெரிகிறது. எனக்கும் என்போன்றோருக்கும் எவ்வளவு பழகியும் பழகியதுபோதாதென்ற வெறுமைதான் நினைவில் வந்து வந்து உதைத்துதள்ளும்.

'ஏதேதோவெல்லாம் நிறையப் பேசியிருக்கவேண்டும்; பேசவில்லையே' என்ற உணர்வும் எண்ண அலைகளும் மனதை வதைத்துச் செல்கின்றன.

ஒரு தம்பதியின் இலட்சியம் எது என்பதை அவர்கள் வாழும் நாட்களில் கண்டுகொண்டுவிடலாம்.

பரா மாஸ்டரின் குடும்பம் என்னை இரசிக்கவைத்தது. பரா மாஸ்டரினதும் மல்லிகாவினதும் சமூக அறிவியல் அக்கறையானது இரு பிள்ளைகளையும் அதே சமூகப்பொறுப்பில் ஈடுபட வைத்தது. நான் எதிர்பார்க்கும் குடும்பவாழ்வை பரா மாஸ்டர் அடைந்துகொண்டார். ஒரு மனிதர் தன்னை அரசியலில் தெளிவுள்ளவராக ஆக்கிக்கொள்ளவேண்டியது கடமைகளில் மிகவும் முக்கியமான கடமையாகும். அதனைத் தன்குடும்பக் கடமையாகக்கொண்டு வாழ்ந்தமை அற்புதமான பெரும்படைப்பாகும்.

சராசரி மனிதருக்கு இருக்கவேண்டிய மானிடக் கடமையின் பொறுப்பு இறுதிவரைக்கும் அவரைவிட்டு விலகாமலே இருந்தது.

பெர்லின் வந்த நாட்களில் இருந்து தொடர்ச்சியாக நடைபெறும் இடதுசாரி அமைப்புக்களின் சர்வதேச மே தினத்தில் கலந்துகொள்ளாமல் விட்டதென்றால் அது மிகச்சுகயீனம் அல்லது அவர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பமாகவே இருந்திருக்கும். ஜனவரி 9ம்தேதி என்றால் அவரை **Rosa Luxemberg, Karl Liebknecht** அவர்களின் சமாதிகளை நோக்கிய நினைவு நாள் ஊர்வலத்தில் சந்திக்கலாம். தை மாதக் குளிருக்குள் பரா மாஸ்டரின் வருகை இனி இல்லாதபோது , ஆயிரக்கணக்கான பூக்களுக்குள் சிவப்புப் பூ ஒன்று **Rosa Luxemberg** அவர்களுக்கு குறைந்து விடப்போவது உண்மைதான். ஆனாலும் தோழமையுடன் அவர் பங்கு குறையாது பூச்சொரியவே செய்யும். தொடர்ச்சியாக இந்த ஊர்வலங்களில் அவர் கலந்துகொண்டமை உடல் ரீதியில் சாதாரணமானதாகவே நினைத்திருந்தேன்; இப்படியொரு இழப்பிற்குப்பின்தான் அவரின் வயதை இப்போது எண்ணி வியப்படைகிறேன். 67,68 வயதளவில் பெர்லின் வந்து இறுதிவரை துடிப்பான மனிதராக எம் வாழ்நாளில் கண்டமை எமக்கெல்லாம் ஒரு கொடுப்பனவே.

தனிப்பட்டமுறையில் இலங்கையின் நிர்வாக அரசியலில் , மற்றும் அதன்

படிப்பகம்

www.padippakam.com

தீர்வுமுறைமைகளில் அவருடன் எனக்குச் சிறிய அளவில் கருத்து முரண்பாடு இருந்ததுதான். அது எனது புரிதலின் இடைவெளியாகக்கூட இருக்கலாம். பேசித்தீர்வு காணக்கூடிய நட்பும் நிதானமும் கருத்துக்களை மதிக்கும் பக்குவமும் அவரிடம் இருந்தமை அவரின் அரசியல் சமூக அக்கறைகளின் தெளிவைக் காட்டிநின்றதை அறிவோம்.

தன் வாழ்நாளில் நாட்டுக்கோ சமூகத்திற்கோ பாரமாக அதாவது பிற்போக்குத்தனமாகவோ, விரயமாக நேரங்களைச்செலவிட்டே வாழ்ந்தோம் என்றில்லாமல் ஒவ்வொரு சுவடுகளும் மனிதர்களின் மலர்ச்சிக்கான வாழ்வை நோக்கிய பணிகளுக்காய் , செயலாய் , எழுத்தாய், சிந்தனையாய், வாசிப்பாய் அமைந்தது என்பதை எண்ணுகையில் அவரின் களைப்பு புரிகிறது.

பல்துறைச் சிந்தனைக் கலைஞனின் இழப்பில் துயருறும் நண்பர்கள், துணைவி மல்லிகா, அன்பு அப்பாவின் பிரிவில் ஏங்கும் உமா, சந்துஷ் மற்றும் முரளி, தினேஷா , சிந்துவுடன் எனது துயரைப்பகிர்கின்றேன்.

செ. தனபாலன், பெர்லின்.

Photo by Para



## தோள் கொடுத்த தோழர்

பராவிடம் நான்
கற்றுக்கொண்டது ஏராளம்.. 94களில்
இருக்கலாம்.
அன்றிலிருந்து, கடைசியாய்
ஒக்.07தலித்மாநாட்டில்
சந்தித்தது வரை அதே சிரித்தமுகத்தை,
பண்பான மனிதர், பாசத்தோடு
பழகிய தோழரை, தளராத,
எந்நேரமும் உற்சாகமான பராவை,
கொண்ட
கொள்கையில் உறுதியான
நண்பரைத்தான் கண்டிருந்தேன்
கார்ல்ஸ்ருகேயில்
இலக்கியசந்திப்பை செய்யுங்கள.நான்
உதவி
செய்வேன்...என்றார் பரா. அவர்

தோள்கொடுத்து செய்தபோது
அவருடைய பேச்சு வெறும்பேச்சாக
வாய்வீச்சுக்காரர்கள்-
மேடைப்பேச்சாளர்கள்மாதிரி இல்லை
என்பதை பதியவைத்தது.
எந்தெந்த
புத்தகங்களை
வாசிக்கலாம்,,என்று ஆலோசனை சொல்லி
தந்தவரே
ஒரு வாசிகசாலையாக
இயங்கினார். கொண்ட
கருத்துக்கும், அதுவழிசெயலுக்கும்
நேர்மையாக வாழ்ந்த பராவுக்கு
சிரம்
தாழ்த்துகிறேன்.
அரசியல்வாழ்வு- குடும்பவாழ்வு என்று
தனித்தனியே பிரிக்காமல் வாழ்ந்த
பராவின் பிரிவு
தாங்கமுடியாமலிருக்கிறது.
மல்லிகா,உமா,சந்துஸ்,முரளியோடு
பிரிவுத்துயரத்தை
பகிர்ந்துகொள்ளும்
தேவா,-Karlsruhe

++++++++++++++++++++++++

www.padippakam.com



# பராவுக்குஎம் கண்ணீர் அஞ்சலி

தமிழ்மகளிர்மன்றத்துக்கு
ஆலோசனை சொல்லி, உறுதுணையாய்
நின்று,ஆர்வமூட்டி, எம்மை
செயற்படவைத்த பரா அவர்களை
நாம் இன்று இழந்து
நிற்கின்றோம்
சர்வதேச மகளிர் தினநிகழ்வுகளில்-மாநாடுகளில்-ஊர்வலங்களில்
எங்களைவிட மிககூடிய
உற்சாகத்தோடு கலந்துகொண்டு,
எமக்கு ஊக்கம் தந்த தோழரின்
மறைவு தாங்கொணா துயரம்
தருகிறது.பழகுவதில்
நண்பராய், எந்தபிரச்சினையானாலும்
விவாதிக்க தயாராய்
இருந்தவரை,எம்
சிந்தனைகளுக்கு
உரம் தந்தவரை,எளிமையான ஒரு நல்ல
பண்பாளரை
எம்மிடமிருந்து காலம்
பறித்துக்கொண்டது. உங்களது
உறுதியான கொள்கையை-உங்களின்
செயலூக்கத்தை மதிக்கின்றோம்.
மல்லிகா,உமா,சந்துஸ்,முரளி,
உங்கள் துயரில் நாமும் பங்கு
பெறுகின்றோம்.எம் நினைவுகளில்
என்றென்றும் இருக்கும்
பராவுக்கு கனத்த இதயத்தோடு
கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.



தமிழ்மகளிர்மன்றம் Stuttgart e.V

படிப்பகம்

www.padippakam.com



சிரித்த முகத்துடனும் தெளிவான சிந்தனையுடனும்
பெர்லினில் நடமாடிய பண்பாளன் பரராஜசிங்கம்
மாரடைப்பென்னும் இயமனின் இலகு ஆயுதத்தால்
இன்று அவரை இழந்து நிற்கின்றோம்
கலைஞனாய் எழுத்தாளனாய் உணர்வுமிக்க பேச்சாளனாய்
எம்முள்ளங்களில் பதிந்தவர்
இன்றெமை விட்டு பிரிந்துவிட்டார்
அன்னாரின் பிரிவு அவரது குடும்பத்தாருக்கு
ஈடு செய்ய முடியாதது
பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கும்
உறவினருக்கும் ஆறுதல் அளிக்க
எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்

-விஜயகுமார் குடும்பம்

*************************************************************************************************

## Memories of Para Uncle

*Like a beautiful fall leaf falling off a weak brittle branch, which was once strong, you left the rest of us by ourselves*

*You were always smiling*
*Giving us and yourself joy*
*However, you left happily, leaving us sad*

*Your presence was always graceful*
*With joy and happiness, your laughter brought smiles*
*To all of our faces*

*Every minute with you was a wonderful moment*
*You are nice when you play cards*
*With me, everyday*

*The time we spent together sharing*
*Little moments was something*
*I will treasure the most*

படிப்பகம்

www.padippakam.com

Your visit was unexpected, after so many years
You came and brought joy to our families
In many ways possible

You had left unexpectedly and we all wish
To see your joyful smile, just one last time.

From
-Jaianesha, Abinesha, & Krishnesha Elanko
-Jathavan & Rugethan Asohan
25th of December 2007 Maple Canada

---

## Our Grandpa

### To our dear grandpa,

You were the only elder who understood children.
You were so smart in terms of technology,
You were very kind, and generous.
We will never forget you and the
Things you did with us.
You were such a happy person;
I have never seen a frown upon your face.
You have never turned down anyone.
We will never forget this misfortune,
Which has come upon us.
You were kind and happy,
Encouraging others to try their best and never give up.
Unlike other birthdays,
This year was a solemn occasion.
We can't believe that you passed away and
We will never forget you.
We miss you, we really do.

From your loving grandchildren,

Nevetha, Aiggetha & Suvetha (Mohan) Vaseeharan
25th Of December 2007 Maple, Canada

படிப்பகம்

www.padippakam.com



அமைதியான அந்த ஆளுமை சரிந்துவிட்டது.

'பராமாஸ்ரர்' என்று அறியப்பட்ட குமாரசாமி பரராசசிங்கம் அவர்கள் எமைவிட்டு பிரிந்துவிட்டார். இடதுசாரி பராம்பரியங்களின் எஞ்சியிருந்த தோழமைகளிலொன்று எமக்கு பிரியாவிடை தந்துவிட்டது. இளமைகாலங்களில் ஒரு தொழிற்சங்கவாதியாக தனது பொதுவாழ்வை ஆரம்பித்த பராமாஸ்ரர் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் மீட்சிக்காக தனது 72 வயதின் இறுதி மூச்சுவரை ஓயாது உழைத்தவர். புகலிட இலக்கிய அரசியல் பரப்பில் பராமாஸ்ரர் அவர்களின் பங்கு அளப்பரியது. இலக்கியசந்திப்பின் தொடர்ச்சி, வளர்ச்சி, சாதனை என்று எதை பட்டியலிட்டாலும் இவரது பங்கின்றி அவை சாத்தியமில்லை எனலாம். தமிழ் மக்களின் விடுதலை என்பதை ஒரு விரிந்த, பரந்த, அகன்ற ஒரு பார்வையோடு அணுகியவர் அவர். ஐரோப்பிய மட்டத்தில் சந்திப்பு, கூட்டம் என்று எந்தவொன்றிலும் மலையக தோட்ட தொழிலாளர்கள் பற்றிய ஒரு குரல் ஒலிக்கின்றது என்றால் அங்கே பராமாஸ்ரர் எனும் உருவம்தான் முன்னால் தெரியும். அதேபோன்று முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை தொடர்ச்சியாக கண்டித்து வருபவராக முஸ்லிம்களின் வரலாறு, வாழ்வு, அரசியல் பாரம்பரியம் என்று அத்தனையையும் விரல் நுனி தகவல்களாக கொண்டு திரியும் ஒரு நடமாடும் நூலகமாக அவர் வாழ்ந்திருந்தார். முஸ்லிம்கள், கிழக்கிலங்கை மக்கள், தலித் மக்கள் என்று தமிழ் சமூகத்தின் விரவிகிடக்கும் அகமுரண்பாடுகள் தீர்க்கப்படும் நாள்தான் தமிழ் மக்கள் விடுதலையடையும் நாள் என்று திடமாக கூறி அதை நோக்கியே தனது செயற்பாடுகளை வகுத்து கொண்டவர் அவர். யாழ்மையவாதத்திற்கெதிரான எமது போராட்டத்தின் ஆளுமை மிகு தூண்களிலொன்று சரிந்து விட்டதாகவே அவரது மரணத்தை நாம் உணருகின்றோம்.

"விழிப்பு-இணையத்தளம்"



www.padippakam.com

S R I  L A N K A  D E M O C R A C Y  F O R U M
Australia Canada France Germany India Japan Netherlands Norway United Kingdom United States
e-mail: contact@lankademocracy.org fax#: 00-1-646-349-1182 website: www.lankademocracy.org

For Immediate Release

27 December 2007

**Para "Master" a Powerful Voice of Tamil Dissent**

It is with enormous grief that we received the sad news of the sudden death of Kumaraswamy Pararajasingham on his 72nd birthday on 16 December 2007. "Para Master", as he was respectfully and affectionately called by his friends and colleagues, was a founder Steering Committee member of the Sri Lanka Democracy Forum (SLDF). He was one of the leading activists in the German Chapter of SLDF.

Para Master's active and continuing participation in the work and activities of the SLDF was only a part of his life-long commitment to his broader struggle against social exploitation and oppression.

The born rebel he was, Para Master's engagement with the struggle for the emancipation of the people from class and social oppression, particularly the tyranny of the caste system within the Tamil community, commenced with his joining the Lanka Sama Samaja Party (LSSP) very early in his life and rejecting the politics of narrow nationalism. However he along with his comrades, did not hesitate to rebel against the leadership of the LSSP when it began to enter its era of coalition politics by associating with the Sri Lanka Freedom Party (SLFP).

Para Master was a committed trade union activist primarily associating and working with the then powerful Ceylon Mercantile Union (CMU).

Para Master also played a very leading and active role in the Jaffna Branch of the of the Movement for Inter-Racial Justice and Equality (MIRJE) which was founded following the enactment of the PTA in 1979 with the escalation of the ethnic conflict and the proliferation of gross human rights abuses by the police and security forces particularly in the northern province of Sri Lanka.

As the culture of violence and repression became internalised and began to dominate Tamil politics and the space and opportunity for free expression began to disappear, Para Master with his family, like many other Tamils, went into exile.

In exile Para Master did not seek satisfaction in the comfortable life styles that most other Tamils did. His deep and abiding commitment to the struggle against tyranny and oppression found reflection in his continuing work in the field of defending human rights and literature. He edited and published a socio-political and literary magazine known as "Sinthanai" (Thoughts) that carried stories, poems and articles that reflected an alternative viewpoint.

Even as the LTTE sought to extend its tyrannical grip of expatriate Tamils by denying freedom of expression by intimidation and violent means, Para Master along with like-minded progressive colleagues, devised literature as the platform on which LTTE's tyranny and its claim for "sole representation" of Tamils was to be challenged. The "Ilakiya Santhippu" (Gathering of



படிப்பகம்

www.padippakam.com



Literature), an event held every few months in different capitals in Europe for the last two decades, where hundreds of progressive writers and campaigners gather to discuss and deliberate, has become the rallying platform for the dissenting community among expatriate Tamils.

We take this opportunity to convey our deepest sympathies to Para Master's wife and life-long companion Mallika, his son Santhush, daughter Uma, son-in-law Murali and daughter-in-law Dinesha, all of whom have in their own right developed into notable writers and campaigners of human and democratic rights for which Para Master stood for.

A powerful voice of the dissenting Tamil community has been stilled by Para Master's death. His departure is a great loss not only to the SLDF as an organisation of which he was an integral and important part, but also to many of the other organisations and individuals with whom he worked with. But we have no doubt that the legacy he has left behind by his selfless, varied, long and outstanding contribution will remain honoured and remembered.

***Sri Lanka Democracy Forum***

*SLDF Statements are drafted by its twenty member Steering Committee.*

*For Media Queries Only Contact: spokespersons@lankademocracy.org*
*SLDF Spokespersons: Rengan Devarajan and Ahilan Kadirgamar*

***Sri Lanka Democracy Forum Mission Statement***

*Sri Lanka Democracy Forum is a community that shares a commitment to a democratic and pluralistic vision of Sri Lanka. We recognize that in addition to the loss of lives, the costs of war also entailed the erosion of democracy, the demobilization of pluralistic and independent social movements, and the further victimization of marginalized communities. In that context, we believe that movement towards a just and sustainable peace must be accompanied by the reconstruction of a democratic community that protects and promotes social justice, and the individual and collective rights and freedoms of all communities in Sri Lanka. We are in solidarity with, and have a commitment to support the efforts of marginalized communities to address past injustices, whether such injustice was based on the suppression of dissent, economic disempowerment, and/or on ethnic, gender or caste discrimination at the national or regional level. Among other efforts, we seek to proactively support grass roots movements that seek to expand and revitalize conditions for a vibrant, pluralistic and independent civil society that nurtures freedom of conscience, diverse political affiliations and an independent media. Thus, we believe that the terrain for engagement is not merely macro-political policy, but also economic decision-making, cultural production, and diverse local struggles furthering democratization in all spheres of life.*

*The Sri Lanka Democracy Forum had its inaugural meeting in Toronto, Canada in 2002.*



படிப்பகம்

www.padippakam.com

## பூக்கும் உன் முகமிருத்தி.....

குளிர் வாட்டிய அந்த
இரவில் உனது
இறுதி மூச்சு
விடைபெற்றுக்கொண்டது
நீ சோர்வடைந்ததை
நான் கண்டதில்லை



இரத்த வெடிலும்
பிணங்களின் குவியலும்
பிஞ்சுகளின் விம்மலும்
பெண்களின் கதறலும்
வேர் கொள்ள முடியாமல்
விரட்டி விழ்த்தப்படுகின்ற
மக்களின் குரல்களும்
காற்றிலே கரைந்தே போயின

உள்ளூர் கிழார்களும்
உலகப் பிரபுகளும்
தலை கிள்ளி விளையாடும்
சொர்க்கத்தீவே
என்னருமைத்தாய்நாடே!

கொலைக்களமாய் மாறிவிட்ட
என்னருமைத்தாய்நாட்டின்
அர்த்தமில்லாப் போரின்
அமைதியை வேண்டிநின்றாய்
நிரந்தரத் தீர்வுக்கென
நித்தம் நீ குரல் கொடுத்தாய்

சுதந்திரம்-
சமத்துவம்-
சகோதரத்துவம்
வண்ணக் கனவுகளுடன்
வாழ்ந்திருந்தாய் என்றும்.

நித்தம் பூக்கும்
உன் முகமிருத்தி
புன்னகையால்
விடைகொடுத்தோம்

-பேர்லின் ராகவன்

படிப்பகம்

www.padippakam.com



To Mr.Kumarasamy's Family
Germany

Anpudaiyeer

I have heard of the contribution Mr.Kumarasamy has made to our community. It is a great loss not only to you all but for the entire Tamil community.
Please accept my heartfelt condolences.
May his soul rest in Peace.
Nanri Vannakkam.
K.Mylvaganam, Nothern Province

++++++++++++++++++++++++++

Date: 19 December 2007
An Appreciation of Para Kumarasamy

We are deeply sad to hear the death of Para Kumarasamy. We have known Para as a social and human rights activist and a writer. He was admired as a co thinker and friend, and his work was greatly appreciated in the exiled writers' community. He was gentle unassuming, often the depth of his feelings emerging when he perceived injustice and unfair discrimination. He was a staunch trade unionist and an active human rights campaigner. Above all, he was highly valued and respected, and inspired affection in all who worked with him. Para had a useful life and he will be very much missed.

Dr Vickramabahu

Left Front,/ Sama Samaja party



படிப்பகம்

நிர்மாணம் அஞ்சலி:

## எங்கள் பரா இனித்திருந்தார்!

உணர்வுக்குள் உந்தும்
ஒரு இருளடைப் பொழுது
ஏற்றமென்றெண்ணும் கணத்தில்
இறக்கம் பிடரியில் தொட்டு
காணத்தக்க மாமனிதர் மரித்த
கதைசொல்லி
மௌனித்துவிடும் இதயம்
இயங்க மறுக்கும் மொழியோடு
உணர்வைக் கொட்டிவிடவும்
முடிவதில்லை
மெல்லத் தொடும் ஞாபகத்தின் முதுகில்
சுமைகளை ஏற்றி
இதயத்தின் அழுகையைக் கோர்வை
செய்வதைத்தவிர
வேறென்ன நம்மால் முடியும்?

எத்தனையோ பொழுதுகளில்
எங்கள் பரா இனித்திருந்தார்!
எப்படியிவர் சொல்லாத
பொழுதொன்றில்
தனித்தே ஒதுங்கினார்?
கூடியிருப்பதிலும்
குறைகாணாதிருப்பதிலும் +
பெருவகமுடையவரோ
பிள்ளைகள் எமைப் பிரிந்தே சென்றார்?
சொல்வதற்கரிய செயற்பாட்டின் பெரும்
வினை
மிகநேர்த்தியுற்ற நெறியின் சுவடு
செல்லப் புன்னகையின் குடில்
சோர்ந்தே போகாத இதயம்
சொல்லினிமை மிகு பேச்சாளன்
தோன்றிய தினத்துள் இருப்பிழந்தான்!
மடிதனில் உருளும் மழலைகளாய்
மனிதரின் அகத்தைப் புரிந்தவர் நாம்
மங்காத குரலும்
மடைதிறந்த அருவியுமான
வார்த்தைகள் ஒதுங்க
மௌனித்துவிட்ட மாஸ்ரர் மக்கள்
போராளியேதான்!
மகிழத்தக்க மனிதருள்
இனித்தே உறவுற்று செல்லக் கரம்
தோள்களில் விரிய
சேதி கேட்டுச் சுகம் விசாரித்த
சுகதேவன் சுதந்திரமாய்ப் போனான்!

**நிர்மாணம்**
21.12.200

++++++++++++++++++++++++++
Dear Susee,
I do not have any word.
**chelian,** Canada
17.12.07

++++++++++++++++++++++++++
**சத்தியக் கடதாசி:**
**முடிவிலாற்றலுடமை**
**தோழர். குமாரசாமி பரராஜசிங்கம்(16.12.1935-16.12.2007)**

**மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
**தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே**
**(புறம்)**
**தோழர் பரா அவர்களுக்கு எமது புரட்சிகரமான செவ் வணக்கங்கள்.**

**சத்தியக் கடதாசி**

www.padippakam.com



**Anpin Malika Aunty, Uma,**
**Santhosh and Murali,**

**I hoped that the funeral will be in the next year but today I heard it is on the 27th of December. I am so sad that we can't attend to the funeral, because Andreas, Ahilan and me are unfortunately in Dresden now. We will be coming back on 30th Dezember. I will be visitng you after that.**
**Take Care!!!**
**Again our deepest condolences to you all.**
**with love**
**Kamala & Andreas**
++++++++++++++++++++++++

அன்பிற்கினிய உமா,
தங்களது தந்தையாரது இறப்புச் செய்தி சுசீந்திரன் வழியாக அறிந்தேன். தந்தையாரை இழந்து நிற்கும் தங்களுக்கு எதைச் சொல்லி ஆறுதல் படுத்த? அமைதியோடும் புன் சிரிப்போடும் பெரிய விடயங்களைக் கூட அலுங்காமல் மிக இலகுவாய் செய்து முடித்து விடும் உங்கள் தந்தையாரைப் போன்ற பெரியவர்களை காணுகையில் பிரமிப்பும், இளையவர்கள் எவ்வளவு அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதும் யோசிக்க வைக்கின்றது. இலக்கியச் சந்திப்பில் எடுத்திருந்த படங்களை பார்த்துக் கொண்டேன்.

காலங்கள் நம் கை மீறியே செயல் பட்டுக் கொடிருக்கின்றன.
உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
அன்புடன்
திலகபாமா, சிவகாசி
+++++++++++++++++++++++++++

**Dear Mallika,**
**I'm so sad about Para's passing away. He was definitely a good man with a good conscience that gave him the strength to fight against discrimination. Men like him are rare!**
**I wish we could have had more time with him together. I, for one, would have**
**learned much more from him. I feel so sad that I'm unable to attend his funeral due to work, but I would be thinking of you all during those hours. I wish your daughter, your son and you would be able to gather strength from those close to you to overcome this trying period. I know how bad it is!**
**Please accept my deepest sympathies, and shall contact you when time and the**
**situation permits.**
**With fondest regards,**
**Trevor Dias**, Berlin

www.padippakam.com



## சந்திப்பின் தந்தை

இயற்கை எய்துதல்,
வாழ்வின் முடிவு,
வாழ்வின் அடுத்த பரிமாணம்,
இந்த வார்த்தைகளிடையே சிக்காத,
எவராலும் விரும்பப்படாத புதிராக
மரணம் வளைய வருகிறது

அன்புள்ள பராமாஸ்ரர்,
இனி உங்களைப் பார்க்க முடியாதென்பதும்
உங்களோடு பேச முடியாதென்பதும்
சாஸ்வதமாய் ஓங்கி அறைகிறது.
"பொழுதே பொய்த்து விடு"
இக்கணம் வரையிலும்
இதைத்தான்
சொல்லத் தோன்றுகிறது



- இரா றஜீன்குமார்,பெர்லின்

**********************



*Photo by Para*

(தோழர் பராவின் எழுபதாவது பிறந்த தினத்தின் (16.12.2005) போது எழுதப்பட்டு,<u>தாயகம்-கனடா</u>இணைய இதழில் வெளியானது.)

**--வயதிற்கும் அனுபவத்திற்கும் மதிப்பளித்து மரியாதை நிமித்தம் தூரத்தே தள்ளி நிற்கும் போதில் ஓர் குழந்தையைப் போல் ஓடி வந்து இடைவெளியை அழிக்கும் நம் தோழர் பரா--**

சுகன்

பதினைந்து வருட முன் பின்னிருக்கும் கலைச்செல்வனுடன் கள்ளப் பாஸ்போட்டில் (சின்ராவினுடையது) ஒரு கனவான் போல் சிலிப்பறேற்றில் படுத்திருந்து ஜேர்மன் இலக்கியச்

சந்திப்பிற்கு போனதிலிருந்து இன்றைய 32 வது பாரிஸ் சந்திப்பு வரை தோழர் பரா அவர்களைப் பார்ப்பதன் கணத்தில் எனக்கு ஒரு மானசீகமான ஆன்மபலம் வந்து சேர்வதை விபரிப்பது விடுதலையையும் சுதந்திரத்தையும் மாற்றுக் கருத்தின் மகிமையையும் விரித்துரைப்பதற்கு இணையானது.

ஆசிரியப் பெருந்தகை என்பதன் அர்த்தபூர்வமான எடுத்துரைப்பு என்பது: சிறப்பான முன்னுதாரணமான வாழ்க்கைமுறை, அறநெறிவாழ்வு, வாய்மை, சொல்லவரும் விடயதானங்களில் ஆழமான பரிச்சயம், மனோதிடம், உறுதி, தன்முனைப்பின்மை, கனிவு, பொறுமை எனும் பூட்கை இப்படியாக அச்சொல் அனைத்தையும் அள்ளிக் கொண்டு வரும். கல்விப் பெருந்தகை, செல்வப் பெருந்தகை என்பதற்கு வேறு வேறு விபரிப்புக்கள் விகுதிப்படும்.

ஆசிரியப் பெருந்தகையினை ஈரெழுத்திற் சுருக்கினாற் பரா எனப்பாற்படும். இவ்வகையில் நானும் நாங்களும் தோழர் பரா அவர்களுக்குக் கற்றுக் குட்டி மாணவர்களே!

"நிறையுடமை நீங்காமை வேண்டின்...பொறையுடமை..." என்று தமிழ் மறையை மேலும் சுருக்கலாம். திருவள்ளுவர் வள வள என்று எழுதுவார் என்றும் ஓர் கருத்துண்டு. மேலும் சுருக்கின் பரா வாகும்.

உரைக்கின் ஒருவன் தன்னிடமுள்ள நல்ல குணங்கள் தன்னை விட்டு நீங்காதிருக்க வேண்டுமாயின் பொறுமையாக இருந்து பழக வேண்டும். பொறுமை தான் வாழ்வின் உயர்விற்கு வழிகாட்டி.

அதே நேரத்தில் ஓர் போராளிக்குரிய போர்க்குணாம்சம் அவருடன் ஜீவத்துடிப்பாய், சுவாசமாய், இயக்கமாய் இருந்து கொண்டிருப்பதே அவரின் முழுமை பெற்ற அடையாளம். இஸ்லாத்தில் கமால் என்னும் பரிபூரணத்தன்மை.

ஒரு இருபதாண்டுகள் புகலிடம் புதிய சிந்தனைகளுக்கும் மாற்றுக் கருத்துக்களினை மதிக்கும் பக்குவத்திற்கும் ஒரு சிலரையாவது தயார்படுத்தி வைத்திருக்கிறதெனின் அது தோழர் பரா அவர்கள் போட்ட அத்திவாரம். அவரின் நுண்ணறிவு இந்த இலக்கியச் சந்திப்பையாவது காப்பாற்றி விட வேண்டும் என்பதில் பெரு வேட்கை கொண்டு நிற்கிறது.

மாற்றுக் கருத்துக்கான வெளிகளைத் தமக்கு மட்டுமே உரிமை கோரி அடையாளப்படுத்துவதற்கெதிராக பரா தனிமனிதனாக நின்று குரலுயர்த்தியிருக்கிறார். இந்த ஒரு புள்ளியில் மட்டுமே அவர் அழுங்குப் பிடியராக இருந்து வருகிறார். இந்த ஓங்கியொலிக்கும் ஒரேயொரு குரல் அவரை அதிகாரத்தையும் தலைமையையும் காப்பாற்ற விரும்புவராக சிலரைக் கருத வைத்திருக்கிறது. இவ்விடயத்தில் தோழர் பரா அவர்களின் விடாக்கண்டத்தனம் மட்டுமே இவ்விலக்கியச் சந்திப்பைக் காப்பாற்றி வந்துள்ளது.

அவரின் காரியார்த்தமான உழைப்பும் மதிநுட்பமும் இந்த நிலைக்கு காரணமாக இருந்திருக்கிறது. மாற்றுக் கருத்து என்றால் இலக்கியச் சந்திப்பு என்று நாம் எல்லோரும் கருதுகின்ற நிலைக்கு பலருடைய உழைப்போடு பரா அவர்களின் கடுழியம் முதன்மையானது.

எழுதப் பேச இருக்கின்ற உரிமைக்கு முதல் எழுதவும் பேசவும் ஊக்கப்படுத்தவும் பத்திரிகையாளர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். படைப்பாளர்கள் எழுத்தியலாளர்கள்

www.padippakam.com

தங்கள் சுதந்திரத்தைப் பத்திரிகைகளிலும் ஊடகங்களிலுமே இனங்காண்கிறார்கள். படைப்பாளர்களின் புதியன முயற்சிக்கும் முனைப்பு ஆழுமை பத்திரிகை ஆசிரியர்களினாலேயே காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றது. இவ்வழியில் தாயகம் ஜோர்ஜ் குருசேவ், சிந்தனை பரா இவர்கள் இன்று வரை தனித்துவமானவர்கள். தாயகத்திற்கும் சிந்தனைக்கும் திருப்பி ஏங்கும் நிலைக்கு இதுவே காரணமாகும். எனது படைப்பின் முழுச் சுதந்திரமான மனநிலையை தாயகத்திலும் சிந்தனையிலுமே நான் அனுபவித்திருக்கிறேன்.

தமிழில் இடதுசாரிச் சிந்தனைகளைப் புகலிடத்தில் பலர் பரப்புரை செய்தனர். ஆனால் கருத்தளவிலும் நடைமுறையிலும் பராவின் வாழ்வியல் அபூர்வமானது. தமிழ்த் தேசிய,இனவாத, பிரதேச, சாதிய அடையாளங்கள் அவரில் கனவிலும் கவிந்ததில்லை.

சர்வதேசியம், கம்யூனிசம் பேசிய யாழ் உயர் வேளாளர்கள் சாதியம், தலித்தியம் என்று வரும்போது தமது சாதிப் புத்தியை மறைக்க முடியாமல் திணறுவதையும் உளறுவதையும் நாம் பார்த்து வருகிறோம். புகலிடத்தில் தலித் மாற்று விளிம்புநிலை அரசியல் அறிமுகமான காலத்திலிருந்து இன்றுவரை இவற்றின் தனித்துவத்தை அங்கீகரிப்பதிலும் தமிழ்ச்சமூகத்தில் தலித்தின் முதன்மையைப் பேணுவதிலும் ரொஸ்கிய சர்வதேசிய முகாமிலிருந்து வந்த தோழர் பரா காட்டிவரும் கரிசனம் நெகிழ்ச்சியையும் மெய்சிலிர்ப்பையும் கொண்டு வருவது. இதில் ஒரேயொரு தனிமனிதர் அவர். வேட்டை நாய்களுக்கும் உள்ளான் குஞ்சுகளிற்கும் உள்ள இடைவெளி அது. கம்யூனிஸ்டாக இருப்பதற்கான கடைசித் தருணமிது.

யயாதி தன் மகனிடம் கேட்கிறான்: „மகனே இவ்வுலகின் சந்தோசங்கள் அனைத்தும் அநுபவித்துத் தீர என்னால் முடியவில்லை. உனது இளமையை எனக்குத் தா"

தோழர் பராவின் எழுபதாவது அகவை பூர்த்தியாகும் இவ்வேளை பரா எனும் என்றும் இளைஞனை நாம் கேட்போம் மகனே உனது கௌரவம், பேரன்பு, மனிதநேயம், சமத்துவம் இவை எல்லாவற்றையும் எமக்குத் தா.

## பெண்கள் சந்திப்பு: அஞ்சலி

புகலிடத்தமிழர் வாழ்விடையே மாற்று அரசியலுக்கு உரமிட்டவர்களில் முக்கிய இடம் வகிப்பவர் பரா அங்கிள் அவர்கள். புகலிட இலக்கியம், பெண்ணியம், தலித்தியம் எனும் கருத்தாக்கங்கள் பற்றிய விவாதங்களை முன்னெடுத்தவர்களுள் அவரும் ஒருவர். ஈழத்தில் கருத்துச் சுதந்திர மறுப்பு, ஜனநாயக மறுப்பு குழி தோண்டி புதைக்கப்பட்ட போதிலும் சற்றே எனினும் சுதந்திரமாக மூச்சுவிடக் கூடியதாகவிருந்த புகலிடத்தில் இலக்கியசந்திப்புக்கும், கருத்துப் பகிர்வுகளையும் உயிர்ப்பிக்க, தனதுபங்கை இலக்கியச் சந்திப்புக்கு மட்டுமல்ல பெண்கள் சந்திப்பின் வளர்ச்சிக்கும் உந்துசக்தியாக செயற்பட்டவர் அவர். ஆரம்ப காலங்களில் வெளிவந்த பெண்கள் சந்திப்பு மலர்களின் வெளியீட்டு பணிகளுக்கு எமக்கு உற்சாகம் தந்து



படிப்பகம்

www.padippakam.com

வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் என்பதை நாங்கள் ஒருபோதும் மறக்கமுடியாது. வெறும் எழுத்து என்ற மாத்திரத்தில் நிற்காது ஆயுத மொழியால் உயிர் பறிக்கப்பட்டவர்களிற்கு குரல் கொடுக்கவும் அவர் தவறவில்லை.

பேச்சுக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லாத இந்த புத்திஜீவித வட்டத்துள் மனிதனாக மட்டுமல்ல தான் பேசுவதற்கும் தன்னுடைய வாழ்க்கை முறைக்கும் இடைவெளி அற்ற முறையில் வாழ்ந்து காட்டிய ஒரு பெரியவர் என்றால் மிகையாகாது. அவரது அமைதியான தோற்றமும் ஆணித்தரமான கருத்தும் அன்பான அரவணைப்பும் எல்லோர் மனதிலும் அவரை இருத்திவைக்கிறது. அவரது இழப்பு அவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல மாற்று அரசியல் பாரம்பரியத்தில் வந்த அனைவருக்கும் பேரிழப்பாகும். அவரை இழந்து நிற்கும் எமது தோழர்களான மல்லிகா, உமா, சந்தூஸ் மற்றும் முரளி, தினேசா ஆகியோரோடும் அவர்களின் துயரங்களோடும் பங்கெடுத்து நிற்கிறது பெண்கள் சந்திப்பு. நினைவுகள் மாத்திரமே உயிர்த்திருக்க உயிர் நீத்துச் சென்ற எம் பரா அங்கிளுக்கு

எமது கண்ணீர் கலந்த அஞ்சலிகள்!

பெண்கள் சந்திப்பு





தோழர் பராவின் இழப்பில் ஆழ்ந்த கவலை கொள்கிறோம். சமூகத்தின் மீது கரிசனையுள்ள , தொழிற்சங்க நடவடிக்கைகளில் அக்கறையோடு ஈடுபட்ட ஒருவராக இலங்கையில் அவரைக் கண்டிருகிறோம். புகலிடத்திலும் அவர் ஓய்ந்துவிடாது ஒரு சமூகசெயற்பட்டாளராக , கருத்தொற்றுமை , கருத்து வித்தியாசங்களுக்கு அப்பால் மனிதநேய அடிப்படையில் எல்லாத் தளங்களிலும் நட்பினைப் பேணும் பண்பாட்டாளராக, சர்வதேச, இலங்கை இடதுசாரி அமைப்புக்களின் செற்பாடுகளில் அக்கறை கொண்டவராக அவரைக் கண்டிருக்கிறோம். ஈடு செய்ய முடியாத இந்த இழப்பின் துயரை அவரது மனைவி, பிள்ளைகள்,உறவினர்கள், தோழர்கள், நண்பர்கள் அனைவருடன் நாமும் பகிர்ந்துகொள்கிறோம்.

சி.கா. செந்திவேல்

பொதுச்செயலாளர் புதிய ஜனநாயகக் கட்சி, இலங்கை

படிப்பகம்

Photo by Thamayanthi,Norway




ஐரோப்பாவின் தமிழர் புகலிட வாழ்வில் அரசியல், கலாச்சாரத் துறைகளில் மாறுபட்ட கருத்துக்களை மிலேச்சத்தனமாக அடக்கி ஒடுக்குகின்ற அகங்காரப் போக்கு தலைவிரித்தாடியபோது அதற்கு எதிரான ஜனநாயக உரிமைகளை மதிக்கும் களத்தை நிர்மாணிப்பதில் பரா குமாரசாமி நிதானமாக உழைத்து வந்திருக்கிறார். அதி தீவிர அரசியல் பிரகடனங்களை முழக்கிவிட்டு செயல் முறையில் ஒரு கைப்பிடி மண்ணை அள்ளிப்போடக்கூடத் திராணியற்றவர்கள் இலக்கிய சந்திப்பு போன்ற நிகழ்வுகளை அர்த்தமற்ற கூட்டமாக விமர்சித்த வேளைகளில் ஆர்ப்பாட்டமின்றி இலக்கிய சந்திப்பின் எல்லைக்குள் ஜனநாயக மரபினைப் பேணியதில் பராவின் உழைப்பு அளப்பரியதாகும்.

பரிகாசமான விமர்சனங்கள், மேதாவித்தனமான தீர்ப்புகள் ஆகியவற்றின் மத்தியில் பக்குவத்தோடும் பொறுமையோடும் இலக்கியச் சந்திப்பைத் தொடர்ந்து நடத்தியதில் அவர் திறமை மிக்கவராகவே இருந்திருக்கிறார். பெண்களை வீட்டில் சிறை வைத்துவிட்டு பெண்ணியம் குறித்து மேடைகளில் முழக்கியும் நீம் கணக்கில் எழுதித் தள்ளுகிற மகானுபாவர்களின் மத்தியில் பெண்களின் உரிமைகளை மதிப்பதில் அவர் நமக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறார். பெண்களை மதிப்பதிலும் அவர்களின் சுயாதிபத்தியமான சிந்தனைகளுக்கு முன்னுரிமை வழங்குவதிலும் பரா விசுவாசமாகவே செயற்பட்டிருக்கிறார். இலக்கியக் கூட்டங்களிலும் அரசியல் கூட்டங்களிலும் பராவையும் மல்லிகாவையும் இணைத்துப் பார்ப்பதே எப்போதும் உற்சாகம் தருவதாக இருந்திருக்கிறது. பரா தான் எழுதிய அரசியல் கட்டுரைகள், சிறுகதைகள் ஆகியன குறித்த விமர்சனங்களையெல்லாம் மிகுந்த அக்கறையோடு கேட்ட நாட்களை நான் நினைவு கூருகின்றேன். தொழிற்சங்கவாதியாகத் தன் தொழிலை இழந்து அரசியல் களத்திலேயே களைப்பின்றி செயற்பட்ட மனித உரிமை வாதியை நாம் இழந்திருக்கிறோம். தான் கூற வந்த விடயங்களை நேர்த்தியாகவும் கேட்போரை ஈர்க்கத் தக்கதாகவும் உரையாற்றுகின்ற இடதுசாரி அரசியல் லாவகம் அவரிடம் இருந்தது. ஐரோப்பிய புகலிட வாழ்வில் ஒரு மூத்த இடதுசாரி அரசியல்வாதியை காலம் பறித்துச் சென்றிருக்கிறது. அவரது பிரிவால் வாடும் அவரது அருமைத் துணையான மல்லகாவிற்கும், சந்தூஷ், உமா, முரளி ஆகியோருக்கும் எனது மனம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

மு.நித்தியானந்தன்

www.padippakam.com





எறிகணை அஞ்சலி:

கனத்த அஞ்சலிகள்
Berlin...Germany

இடது சாரிய சிந்தனையாளரும்
மாற்றுக்கருத்தாடலாளர்களின் முன்னோடியுமான
தோழர் பரராஜசிங்கம்
**16/12/1935** ல் வருகை............
**16/12/2007** ல் புறப்பாடு............
**27/12/2007** ல் செங்கம்பள வழியனுப்பு
நாடே நாடே நாடே
நீ எனக்குத்தந்த குழந்தைப்பருவமும் மகிழ்ச்சியற்றது....
இளமைப்பருவமும் மகிழ்ச்சியற்றது....
அதற்கான தண்டனையை நீ பெறுகிறாய்.......
நாடே நாடே
உலகில் இலக்கின்றி நான் அலைகின்றேன்...
அன்பே காட்டாத நீ.....
என்னை உனது இரத்தமும் சதையும் சந்ததியும் என்று சொல்கிறாய்...
நீ எனது நாடு இல்லை என்கிற முடிவை எடுக்க என்னைத்தள்ளினாய்....
நான் துயரத்துடன்தான் மரிப்பேன்.....
ஆனால் அப்போது கூட நான் உன் பெயரை உச்சரிக்கப் போவதில்லை...
நீ என்னதான் செய்தாலும்... மீண்டும் என்னை நீ காணப்போவதுமில்லை

நீ இறக்கும் போது கூட உன் குற்றங்களையும் தவறுகளையும்
ஒரு முறை தன்னும் கேள்விக்குள்ளாக்காமலேயே...
இறப்பாய.....?
நீ என்களித்த வலியினை நீயும் உன் வாழ்வில்
அநுபவித்துக்கொண்டேயிருப்பாய்.......
ஆபிரிக்கக் கவிதை இது
பரா மாஸ்ரருக்கான எறிகணைகளின் சமர்ப்பணம்....

-எறிகணை

படிப்பகம்

www.padippakam.com



எமது புகலிட அரசியல் இலக்கிய வாழ்வில் நாம் அவர்களுடன் அல்லது எம்முடன் பயணித்த பலரை இன்று இழந்து நிற்கிறோம் ஒவ்வொருவருடைய இறப்பும் எம்மை பலவீனப்படுத்தி ,பலப்படுத்திச் செல்கிறது. பரா மாஸ்டரின் இறப்பு எமக்கு எதிர்பார்க்காத ஒன்று, முன்புபோல் அடிக்கடி சந்திக்க முடியாதுபோனதன் வேதனையை இவருடைய இழப்பிலும் உணரமுடிகிறது. ஓராண்டிற்குமுன் சந்தித்தபோது நலமாக இருந்தார் .கடைசிவரைக்கும் அரசியல் ,இலக்கியமென்று இயங்கிக்கொண்டிருந்தவர், திடீரென்று எம்மை விட்டு பிரிந்தது நம்பமுடியாத வேதனை. எல்லா வயதினருடனும் நண்பராக பழகுபவர், எல்லாவிடயங்களையும் ரசித்து, தானும் ஒருவராக கலந்து கொள்ளக்கூடிய கலை உணர்வுள்ள ஒரு கலைஞனை, இனிய மனிதரை இழந்து நிற்கிறோம், எப்போதும் எல்லாவற்றிலும் இவரின் பலமாக இருந்த மல்லிகா அன்ரி, சந்துாஸ், உமா, முரளி மற்றும் உறவினர்களுடனும் எம் துயரைப் பகிர்ந்துகொள்கிறோம் .அவரின் சிரித்தமுகம் என் கண்முன்னே தோன்றி மறைகிறது.

றஞ்சினி,**Frankfurt**

*************************************************************************

## நினைவுவெளியில் பரா அவர்கள்

கடந்த ஒக்ரோபரில் பாரிசில் நடந்த தலித் மாநாட்டில் தோழர் பரா அவர்களை சந்தித்திருந்தேன். நீண்ட இடைவெளியின்பின் அவரை அப்படியேதான் நான் கண்டேன். சிரித்த முகத்துடனேயே இப்போதும் அவர் என்னிடம் வந்தார். சுவிசில் எல்லாம் ஓய்ந்துவிட்டதாஎன்ற ஆதங்கத்தடன் அவர் பேச்சைத் தொடங்கினார். இந்த வயதிலும் அவரின் கவலை எல்லாம்இப்படியேதான் இருந்தது. அது எனக்கு ஒருவித குற்ற உணர்வைத்தந்தது. அவரின் சிந்தனை உலவும் இந்த வெளிகளுக்கு மேலால் எதையும் முக்கியமாக்கிவிட என்னால்முடியாமல் இருந்தது. தலித் மாநாட்டின் நிகழ்ச்சிக்கு அவர் தயாரிப்புகளுடன்வந்திருந்தது அவர் தனது முதுமையை எதிர்த்த போராட்டமாகவே எனக்குப் பட்டது. தனது வாழ்வை இந்த வெளிகளில் அவர் பதித்திருந்தார்.அதனால்தான் அவரால் வயதுகடந்து ஒரு நண்பனாகவும் பழகமுடிந்தது.



பனியின் உதிர்வுகளுக்கும் நிறம்மீதான உத்தரிப்புகளுக்கும் இடையில் திருகித் திருகி உச்சரிக்கப்பட்ட வாழ்வினிடை வேர்விடப் போராடிய வாழ்வு எம்மது.இருத்தலுக்கானது என்றளவில் தாண்டிய துயரினிடை அரசியலை ஒரு சமூக விஞ்ஞான வாழ்வாய் வரித்துக்கொள்வதில் முயற்சி செய்தோரும தோற்றுப்போனோரும் என்றெல்லாம் போக மிஞ்சியவரைக் கண்டால் முரண்பாடுகளையும் தாண்டி ஒரு பிடிப்பு வருகிறது. பரா அவர்களை நான் காணும்போதெல்லாம் இந்தப் பிடிப்பு அதிகமாகவே என்னிடம் தொற்றிக்கொள்ளும். வயதை அவர் கண்டுகொள்ளாதபடி அவரது அரசியல்வாழ்வு

படிப்பகம்

www.padippakam.com

எம்மிடம் அவரைக் காண்பிக்கும். இயங்கிக்கொண்டே இருந்தவர் அவர். மாற்றுக் கருத்துகள்... அரசியல் விவாதங்கள்...இலக்கிய நிகழ்வுகள்... கலந்துரையாடல்கள்... சந்திப்புகள் என்றெல்லாம் நீண்டு வளர்ந்திருந்தார் அவர். இலக்கியச் சந்திப்பின் ஒரு வேராக அவர் இருந்தார் என்பதும் மனிதஉரிமைகளில் அக்கறை கொண்டிருந்தார் என்பதும் அவரைவிட்டுப்பிரிக்கமுடியாததாகிவிட்டது. ஒன்றும் நாம் பெரிதாகப் புடுங்கிவிடவில்லைத்தான். அக்கறையுற்றிருந்தோம்... குரலாக ஒலித்தோம்... புகலிட இலக்கியமாக வெளிப்பட்டோம்... கேள்விகளாக நின்றோம்...
என்றெல்லாம் சொல்லிநிற்கும் ஒரு சாட்சி பரா அவர்கள். இந்த வாழ்வில் எங்களை நாம் வீணடித்துவிட்டோம் என்றெல்லாம் தோழர்கள் நண்பர்களாக இல்லாமல் ஓடியபோதெல்லாம் உரம்தரும் சக்திகளாக நின்றோரில் பரா அவர்கள் முக்கியமானவர்கள். தான் மட்டுமன்றி குடும்பத்தையே தான் உலவிய இந்தப் பொதுவெளிகளில் எமக்கு அறிமுகப்படுத்தியவர். இன்று அவர் நம்மிடை இல்லை. நினைவுகளை தந்துவிட்டுப் போயிருக்கிறார். புலம்பெயர்வாழ்வின் அள்ளுப்படலங்கள் அவர் உலவிய வெளியில் ஒரு எதிர்க்காற்றாய் உலவும்வரை அவரின் நினைவு இன்னுமின்னும் விரிந்தபடி அசையும். புலம்பெயர் இலக்கியம் ஒரு பதிவாய் இருக்கும்வரை பரா அவர்களின் பணியும் பதிவாய் இருக்கும். உமாகாந்தன், கலைச்செல்வன், புஸ்பராசா... இன்று பரா... இப்படியே உதிர்வுகளின் காலம். மரணம் அவர்களின் உடல்களை சருகாய் எடுத்துச் சென்றது. நாம் நினைவுகளை பத்திரப்படுத்துகிறோம். கணவனின் இழப்பில் துயருறும் மல்லிகா அன்ரிக்கும், ,தந்தையின் இழப்பில் துயருறும் உமா, சந்தூஸ் க்கும் மாமாவின் இழப்பில் துயருறும் முரளிக்கும் எமது அரவணைப்புகள், எம்மையெல்லாம் அவர்களுடன் பிணைத்தபடி தனது இழப்பை துயருறச் செய்த பரா அவர்களின் வெளிகளில் நாம் நடந்தபடி..

- ரவி, ரஞ்சி

தேதி: 21.12.07 /

**Dear Shana, dear Malika,dear Shantush,**

**I don't know what to say to you. I'm very sad. I got the bad news here in Taiwan from Helga. With Para I lost a great comrade and friend. The world lost a true revolutionary. I just remember his friendliness and calmness and the occasions. I had the fortune to meet him. I'm so sorry that I can not come to Berlin for his funeral and to meet you there. I want to give You all a big hug.**

**in mourning and wishing Your whole family the best,**
**Theo**

+++++++++++++++++++++++++++

அன்புடன்

மல்லிகா உமா கணவரின் ,தந்தையின் இழப்பு இத்தருணத்தில் எங்களுக்கும் மேலான ஒரு சக்தியால்தான் உங்கள் அனைவருக்கும் ஆறுதலைத் தேறுதலைத் தரமுடியும் . ஈடு தர முடியாதது.பரா மாஸ்ரர் மனிதநேயம்,பண்பாடு,அன்புள்ளவர் .இது எல்லவற்றுக்கும் அப்பால் அந்த சிரிப்பு அனைத்துத் தளத்திற்கும் அப்பால் கவரக் கூடியது .காலம் அவரை கடுகதியாக எடுத்துப் போய்விட்டது. அவர்சின்னப்பிள்ளைபோல் தனைச் சூழ்ந்தவர்களோடு பேசுவார் பழகுவார். முரண்பட்டநாட்டங்கள் எமக்குள் இருந்த போதும் பாரா மாஸ்ரரை எங்களால்இலகுவாக மறந்துபோய்விட முடியாது. கோசல்யா கவிதை முதலாவதுபுத்தகம்

படிப்பகம்

உருவாக அவர்களின் உதவியை நினைவு கூருகின்றேன் .அதைவிட பேர்னில் என் புத்தகம் வெளிவந்தபோது விமர்சகரின் நோக்கத்தைதுல்லியமாக அறிந்து 'கோசல்யா பாகம் ஒன்று இதில் ஒரு கவிதை கூட எழதவில்லையா" என்று விமர்சகரைப் பார்த்து அர்த்தமாக வினாவியது இன்னும் அவர் நேர்மையையின் பதிவிலுள்ளது. அவர்கள் ஒரு நல்ல கணவர், ஒரு தந்தை , நல்ல மாமனார் ,நல்ல பேரன் ,நல்ல நண்பர். அவர் வாழ்ந்த பாகம் அவருக்கு திருப்திகரமாக இருந்து வந்தள்ளது. அவருக்கு சாவு நேர விருப்பமிருக்காது.ஏனெனில் அவர் நல்ல குடுபத்தவர். குடும்பத்தை மிகவும் நேசித்தவர். இவ்வளவும் எமக்குத் தெரிந்தவை .இனிதாக வாழ்ந்த பரா அவர்கள் சாவடைந்தது மல்லிகா ,சந்தோஷ் ,முரளி சிந்து,அன்னம் உறவினர்,அவர் நண்பர்கள் , இவர்களைத் துயரில் விட்டுப் போனதை – திடங்கொள்ளவே வேண்டும் .

உங்கள் துயரில் பங்கேற்று துயரை பகிர்ந்து கொள்கின்றோம்.

நேயத்துடன் கோசல்யா- சொர்ணலிங்கம்

++++++++++++++++++++++++++++++++++++

**Dear Uma & Sinnathamby**
**I am sorry to hear about the death of Para. It is close upon 15 years since I met him I think. The last time was perhaps in France. The memories are still pleasant in my mind.Please accept my deepest sympathies.**
**Sivasegaram**

+++++++++++++++++++++++++++++++++++

**Malika, Uma,Santhosh & Murali,**

**Our heartfelt condolences.**

**Alagiri family**

*******************************************

**Dear Mrs. Para, Santhus, Uma**

**We are really sorry for not conveying our condolence. Please accept our condolence and we share your grief and the prayers.**

**We tried to call you and your lines are busy and during the day I am away from office/home. Please accept our heartfelt condolence on the sudden demise of Mr. Para.**

**Bazeer and Co**

**************

**Dear Santhosh,Malika Akka,Uma & family**
**How sorry we are to hear of your loss. We would like to express our solidarity and sincere condolence to you and your family, we know no one can take the place of a father. No words can make a passing easy to understand, May God gives you and your family all the strength to tide over this extreme loss and grief ,But Friends are around to help you if you need it. He may have gone from this world,But im sure he will live in your heart for all time,May the departed soul rest in peace, We are always there with"U"all.With Lots of prayers Somasundaram Mary, christina & Angela**

www.padippakam.com

Dear Mallika, Santush and Uma,

It is with great sorrow that we have heard to passing away of comrade Para. We greatly admired his commitment and dedication to the socialist movement and we were all inspired by the tireless service he rendered to the poorand the oppressed. Please accept our deep felt condolences.
Members of the Resource Centre for Community Groups Sri Lanka, Ja-ela Workers' Centre and the Multicultural and Education and Recreation Centre

Shantha Peiris, Hemachandra, Gamini,Raj,Upali Cooray,Jayantha Dias
Milton Perera,Sajeewani Priyanka,P. A . Wijesundara,Ranjith Silva
and all other in the staff

Dear Uma, Santosh & Mallika Aunty

I am sending my deepest condolences to you. My thoughts and prayers are with you during this time. I hope you are all keeping well. Please get in touch with me when you can.

Best regards,

Prasanna

Ich bin zurzeit in Sri Lanka und bin sehr traurig wegen unseren Paras Tod. Bitte sage Mallika, Uma und Santhush meinem herzlichen Beileid. Er ist einen großen Verlust für uns und auch für unseres Land. Ich bin sehr traurig, dass ich nicht bei Paras Kremation dabei sein kann. Sri Lanka ist nicht zu retten. Wie die Leute hier denken, ist es unglaublich. Ich komme am 12. Januar in die Schweiz zurück. Liebe Grüsse an alle und werde ich am 27 ten an Para denken.

Dinusha Sepalage
++++++++++++++++++++++++++++++++



Krishna Subramania:

A tribute to Prarajasingam

Dear Friends,
It was one of Sri Lankas saddest days. Comrade Pararajasingam died on the 16th of December 2007 - his Birthday.

He leaves behind his wife, his daughter Uma and his Son Shanthush and grandchildren.

He was born on 16th of December 1935 in Nallur Sri Lanka. He was a Student in Jaffna

படிப்பகம்

www.padippakam.com

**Hindu College. After he completed his A Levels, he studied first Mathematics and later Economic Science at the University of Colombo. In the 60´s he worked in the Fishery Cooperation as chief accountant. At this time he became a trade union activist. He was a leading activist in the CMU (Ceylon Mercantile Union).**

**He married Malika, a Sighala human rights activist from Colombo in1966 against the protest of many relatives and from 1966 to till his death they were a happy couple, spending their days together.**

**In the 70´s he was very active in the Human Rights activities and he continued Political Liberation struggle together with Balathambu. He was engaged in the release of JVP members, who were imprisoned after 1971 insurgency.**

**After the July 1983 violence, he had to leave Sri Lanka. From then on he lived in Stuttgart Germany, but never gave up his political work. He founded first the Tamil Rights Committee and in 1985 started a Tamil Magazine Called "Sinthanai" together with many other democratic Tamils. He was also a founder Member of "Ilakiychanthipu" (Tamil Literary organisation), which was founded in 1988 and he was an activist and founding supporter of the German Tamil Womens Rights Association. He was also a good photographer and his contribution to the 3rd world groups in the late 80´s in Germany was important.**

**At the beginning of the new Millennium he moved to Berlin. He continued his activities from there, becoming an active member of the International Network of Sri Lankan Diaspora, and this year in April he represented together with other NGO´s the INSD in discussion with German Bundestag (Parlament) Members in Berlin.**

**I cannot describe the agony. He leaves a great irreplaceable gap in Sri Lankan Human Rights and Political activity arround Tamil and English literature.**

**He all ways live among us.**

**We all share the agony with Malika, Uma, Santhush and the rest of the family.**

**Krishna Subramania**

## சிந்தனைப் பரா அவர்களுக்காக நெஞ்சோடு நெருங்கி...

தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை, எவரெவரோ தீர்மானிக்கும் அரசியலாக முன்னெடுக்கப்படுவதில் அந்தக் குறிப்பிட்ட மக்களே இப்போது பலியாகிவருகிறார்கள்.மக்களின் அதீத வாழ்வாதாரத் தேவைகளுக்காக-இலங்கையில் யுத்தத்தை நிறுத்து என்று ஓங்கியொலித்த ஒரு குரல் ஓய்ந்து-பந்திகொள்கிறது!,தோழர் புஷ்பராஜாவுக்குப் பின் புலம் பெயர் சூழலில் இன்னொரு ஆளுமையை நாம் இழக்கிறோம்! மிக அமைதியான மனிதரும், கருத்தாளுமை மிக்க சிந்தனையாளருமான தோழர், சிந்தனைப் பரராஜசிங்கம் அவர்கள் **16.12.2007** காலமாகியதைத் தோழர் இரயாவின் மூலமாகவே நான் முதலில் தெரிந்து,அறியக்கூடியதாக இருந்தது.

எனக்கும் சிந்தனை ஆசிரியருக்குமான தொடர்பு **1989**ஆம் வருடமே ஆரம்பமாகிறது.தெரியாதவரைக்கூடத் தெரிந்தவராகக் கருதிப் பழகும் அவரது முதற் சந்திப்பே எனக்குச் சுகமான அநுபவமாக இருந்தது.அவருக்கும் எனக்குமான வயது வித்தியாசம் காரணமாக நான் அவரை"ஐயா"என்றே அழைப்பதுண்டு!எனது தந்தையாரைப் பார்ப்பதுபோன்றவொரு உணர்வு அவ்வப்போது எழுவதுண்டு.மல்லிகா அம்மாவையும்,பரா

படிப்பகம்

www.padippakam.com

மாஸ்டரையும் 89 ஆம் ஆண்டு அவர்களது (முன்னர் வதிந்த) ஸ்ருட்காா்ட் வீட்டினில் சந்தித்த காலம் கண் முன் விரிகிறது!

எந்த வயது வித்தியாசமுமின்றி அந்த அறிஞர் என்னோடு உலக சோசலிசப் போக்குகள்-விஞ்ஞானத்தின் இருப்போடு நிலைபெறும் முதலாளிய வியூகம் குறித்தெல்லாம் நீண்ட நேரம் விவாதித்தார்.மிக எளிமையான மனிதர்.இறுதியாக அந்த மனிதனை கலைச் செல்வனின் மரண இறுதி நிகழ்வில் பாசத்தோடு முத்தமிட்டேன்.
அதன் பிறகு அவரைக் காணேன்!

இப்போது, நம்மிடமிருந்து பரிபூரணமாக விடைபெற்றுச் சென்றுவிட்டார்!
நான், அவரோடு இலக்கியச் சந்திப்பு நிகழ்வைக் குறித்த அவரது பார்வைகளோடு முரண்பட்டிருக்கிறேன்.எனினும்,அவர்மீதும்,அவரது நாணயத்தின்மீதும் மிகவும் மதிப்பை என்றும் வைத்திருந்தே வந்திருக்கிறேன்.தான் கொண்ட அரசியல் வாழ்வுக்கு மிக உண்மையாகவும்-மக்களின் உரிமைகளைத் தனது வாழ்வுக்காக வளம் சேர்க்கும் மூலதனமாக்காது என்றும் மக்கள் நலப் போராளியாகவே பரா அவர்கள் வாழ்ந்துள்ளார்கள்.மகத்தான பணிகள் நம் முன் கிடக்கிறது.இதை மிக நேர்த்தியாக அறிந்தவர் பரா அவர்கள்!

எனவே,அதுள் தன்னால் முடிந்தவரை-தனது எல்லைக்குட்பட்டவரை பரா அவர்கள் பணியைத் தொடர்ந்திருக்கிறார்கள்.இந்தப் பணியின் தொடராக அவர் புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் "பெருந்தாக்கஞ் செய்த எண்ணங்கள் சஞ்சிகை" நின்ற பின் சிந்தனை எனும் சஞ்சிகையைத் தொடராக வெளிக்கொணர்ந்து, நம் எழுத்துகளுக்கெல்லாம் களம் அமைத்தார்.நான் அறியப் படைப்பாளிகளை முழுமையாக வெளிப்படுத்தியவர் சிந்தனைப் பரா அவர்கள் மட்டுமே.தனக்கு முரண்பாடாக அல்லது உடன்படாதவற்றைக்கூடத் தனது பத்திரிகையில் கத்திரிவைக்காது பிரசுரித்தவர் அவர்மட்டுமே.

பெரும் ஜனநாயகப் பண்புமிக்க நாணயமான மனிதர் என்பதற்கு அவரது அணுகு முறையே சாட்சிபகர்பவை.
ஆனால்,இலக்கியச் சந்திப்பில் அவரது போக்குகள்,ஆளுமைகள் குறித்து விமர்சனங்கள் எனக்குள் உண்டு.அது கடந்த அவரது அரசியல் நிலைப்பாட்டிலும் இருக்கிறது.என்றபோதும், ஒரு அற்புதமான நட்புள்ளங்கொண்ட நல்ல பெரியவரை இழந்தது மனதுக்குக் கஷ்டமாகவே இருக்கிறது.அவரோடான உளப்பூர்வமான உறவுற்ற தருணங்கள் நெஞ்சில் விரிகிறது.அந்த நெஞ்சோடு நல்ல மனிதரைக் குறித்த நிறைந்த ஞாபகங்கள் உணர்வைப் பிழிந்து,விழிகளைக் கசக்கவைக்கின்ற இந்த அவரது மரணம் மிகவும் வலிக்கிறது.

இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் தமது சமூக சீவியத்தைப் பெரிதும் அழியவிட்டுத் தகர்ந்த சமூக வாழ்வை அரைகுறையாக மீட்டு வாழ்ந்து,உயிரைப் பிடித்திருக்கும் இந்தச் சூழலில், அவர்களின் வாழ்வாதாரங்களைக் காப்பதற்கும்,அதை மீளக்கட்டியழுப்பி அவர்களின் உயிர் வாழ்வை உறுதிப்படுத்தும் ஜனநாயகப் பண்புகளைக் கோரிக் கொள்ளவும்- குடிசார் மதிப்பீடுகளை நிறுவிக் கொள்ளும் குடியியல் முறைமைகளை நோக்கிய-இராணுவ,பொலிஸ் முகாம்கள் அகற்றப்பட்டு, வாழ்விடங்கள் மறுபடி மக்கள் வாழும் ஆதாரங்களாக நிறுவிக் கொள்ளும் முன் நிபந்தனைகளை வைத்துத் தினமும் கருத்தாடியவர் சிந்தனை ஆசிரியர் பரா அவர்கள்.யுத்தைத் நிறுத்தக் கோரித் தன் வலுவுக்கு உட்பட்டவரைத் தன் துணைவி மல்லிகா அம்மாவோடு இணைந்து படைப்புகள்

www.padippakam.com

கருத்துக்கள் எனத் தொடர்ந்து எழுதியும் உரையாடியும் வந்தவர்.இவரது பிரிவில் நானும் துயருறுகிறேன்,அவர்களது குடும்பத்தவர்களைப் போலவே!

மல்லிகா அம்மாவுக்கும் அவர்களின் குழந்தைகளான உமா ஷாணிகா சந்தூஷ் ஆயோருக்கு எனது ஆழ்ந்த அனுதாபம் உண்டு!

மக்களின் அதீத மானுடத் தேவையான உணவு,உடை,உறையுள் யாவும் இலங்கையின் யுத்தப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு கைக்கெட்டாத கனியாக்கப்பட்டுள்ளது. இதனால் யுத்தத்துக்குள் வாழும் தமிழ் பேசும் மக்களின் அதீத மனிதாயத் தேவையாக இருப்பது அவர்களது உயிர்வாழும் வாழ்வாதாரங்களே என்று அடிக்கடி கூறிக் கொண்டவரும்,தனது அரசியல் வாழ்வை உலகத் தொழிலாளவர்க்கத்துக்குள் இறுகப் புதைத்தவரும் தோழர் பரா அவர்கள்.எமது சமுதாயத்தில் நிலவும் மிகக் கொடூரமான கருத்தியல் ஒடுக்குமுறைக்கு-ஜனநாயக மறுப்புக்கெதிராகத் தொடர்ந்து போராடிய,மறுத்தோடிப் போராளியின் வாழ்வு நிறைவு-உலகத்தின் மூலத்தோடான இணைவு எம்மை மிகவும் பிரமிக்க வைப்பது.அந்த வகையில் சிந்தனைப் பரா வெற்றியாளனே!

அவரோடு கருத்தாடி,முரண்பட்டு,"ஐயா"என்று உறவுற்று வந்திருக்கிறேனென எண்ணும்போது பெருமிதமாக இருக்கிறது.

"வாருங்கள்"

"இருங்கள்"

"சுகமாக இருக்கிறீர்களா?" -

என்று மிகப் பெரிய மனிதருக்குக் கொடுக்கும் மரியாதையை எனக்கு-எமக்குத் தந்தவர் பரா அவர்கள்.எந்தப் பொழுதிலும் புன்னகை குவிந்த முகத்தோடு தந்தையாக எனக்கு முன் விரிந்த அவரது உடல் இன்று இயங்காது பேழையுள் உறங்குகிறது!

அவருக்கு எனது செவ்வஞ்சலி!

ஆழ்ந்த கவலையோடு,

ப.வி.ஸ்ரீரங்கன், 18.12.2007

**************************************************************



**Mittwoch, Dezember 19, 2007**

**I was shocked to hear of Para's death, especially at such a young age. That's a great loss to the ISDN and to the whole world! I'm unfortunately in Colombo and will not be able to attend the funeral, please convey my deepest sympathies.**

**Best wishes,**
**Ruveni**

++++++++++++++++++

**Today I came to check my mails. Ranji wrote that Para is gone. I felt very deep sorrow. I could not believe it. I still could not recover from the shock. I saw his photograph in the "Uyirinzhal" magazine. He looked well. Please convey my heartfelt condolences to Mallika, Uma, Santhush and Murali. I wish I were there. First Kalaichelvan and then Umakanthan and Pusparajah, now Para, what a tragedy!**

**Bharathidasan**

படிப்பகம்

www.padippakam.com



பரா மாஸ்டர் என அன்பாக நாம் அழைக்கும், தோழர் பராவும் இன்றில்லை! 2007 டிசம்பர் மாதம் 16ந்திகதி பின்னிரவு 23.30 மணியளவில் இவர் காலமாகிவிட்டார் என்ற செய்தி அதிர்ச்சியையும் துக்கத்தினையும் தருவிக்கிறது. என்னில் ஒரு துண்டம் இல்லாமல் போவதுபோல் உணர்கின்றேன், வலிக்கிறது. எஞ்சி இருக்கும் இறுதி நம்பிக்கைகளையும் உசுப்பி நிற்கிறது. இலக்கியச்சந்திப்புகளினதும் சமாதானத்திற்கான கருத்தரங்குகளினதும் நினைவுகளில் மனம் கரைகிறது. தாயகத்தில் இடதுசாரி அரசிலிலும் தொழிற்சங்க அரசியலிலும் நீண்டகாலம் அவர் கொண்ட அனுபவம் புகலிடச் சூழலில் மறுத்தோடி வாழ்வில் எங்களுக்கு வலிய தோள்களைத் தந்தது. தொடர்ந்து வரும் தோழர்களின் இழப்புகளின் வரிசையில் பராவின் இழப்பு எமது கனவுகளின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கைகளை தகர்த்து பயம் கொள்கிறது.

முதுமையை எட்டி உதைத்து நின்று பத்திரிகை வெளியீடு, அரசியல் , இலக்கியம், விமர்சனம், குறும்படவிழாக்கள் என உற்சாகமாக இயங்கிக்கொண்டிருந்தவர், சாவை எட்டி உதைக்க முடியாமல்ப்போனது எங்கள் சோகம். இவரின் பிரிவில் துயருறும் மல்லிகா அன்ரி, உமா, சந்துஸ், முரளி மற்றும் தோழர்கள் அனைவரின் கரங்களைப் பற்றி நிற்கிறேன்.

கரவைதாசன்,டென்மார்க்

Tamil Information Centre
**Date: 19 December 2007**
**An Appreciation of Para Kumarasamy**

**We are deeply saddened to report the death of Para Kumarasamy, aged 73, in Germany on Sunday, 16 December 2007. We have known Para as a social and human rights activist and a writer. He was admired as a colleague and friend, and his work was greatly appreciated in the exiled writers' community. He was gentle unassuming, often the depth of his feelings emerging when he perceived injustice and unfair discrimination. He was a staunch trade unionist and an active human rights campaigner. Above all, he was highly valued and respected, and inspired affection in all who worked with him. Para had a useful life and he will be very much missed.**

**We extend our deepest sympathies to Mallika, Uma, Murali and Santhush.**

**Tamil Information Centre**
**Thulasi**
**Bridge End Close**
**Kingston Upon Thames**
**KT2 6PZ**

படிப்பகம்





சிந்தனை

**தோழர் பரா அவரகள் 1985 ஆம் ஆண்டில் இருந்து "சிந்தனை" சிற்றிதழை காலாண்டு இதழாக 1995 ஆம் ஆண்டுவரை வெளிக்கொண்டுவந்தார். இந்தப் பத்து வருட கால இதழ்களை யெல்லாம் கணணியில் ஏற்றிவிட பரா முயன்றுகொண்டிருந்தார்.அவர் தொடக்கிய இணைய "சிந்தனை":**

http://sinthanai.org

ஊடறு

புகலிடத்தில் நம் எல்லோராலும் பரா அங்கிள், பரா மாஸ்ரர் என அன்பாக அழைக்கப்பட்டு வந்த தோழர் பரா அவர்கள் (பரராஜசிங்கம்)

நேற்றிரவு (16.12.07) திடீரெனக் காலமானார். அவரின் பிறந்த தினத்தன்றே மரணமும் அவரைத் தழுவிக்கொண்டது. இலக்கியச் சந்திப்பின் ஆரம்பகர்த்தாவும் இலக்கியச்சந்திப்பு நிகழ்வுகளின் முன்னோடியும் சிந்தனை சஞ்சிகையின் ஆசிரியரும் இடதுசாரி அரசியலாளருமாகப் பல பரிமாணங்களில் செயற்பட்ட அவருக்கு வயது 73. இவர் ஜேர்மனியிலுள்ள ஸ்டுட்கார்ட், பேர்லின் நகரங்களில் தனது புகலிட வாழ்வை மேற்கொண்டு வந்தவர். இடதுசாரியச் சிந்தனை கொண்ட இவர் இலங்கையில் பல தொழிற் கட்சிகளின் வேலைத்திட்டங்களிலும், அதன் போராட்டங்களிலும் பங்குபற்றியவர். தோழர் பரா அவர்கள் புகலிட இலக்கியத்துறையில் மட்டுமல்ல மாற்று அரசியலிலும், தலித்தியத்திலும் ஈடுபாடுகொண்டவராக இருந்தார். அத்தோடு அவர் மனிதஉரிமைகள் மீதான அக்கறை கொண்டவராக இருந்ததோடு, மனிதஉரிமை மீறல் சம்பவங்களை அவ்வப்போது பரவலாக்கி வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதை ஓய்வில்லாது செய்துவந்தவர். சாதிய மேலாதிக்க ஒடுக்குமுறைக்கெதிராகவும் போராடிவந்தவர். கடந்த ஒக்டோபர் மாதம் பிரான்சில் நடைபெற்ற தலித் மாநாட்டின் நிகழ்ச்சியில் பங்குபற்றி தனது ஆய்வுரையை வழங்கியிருந்தார். இதுவே அவர் கடைசியாகப் பங்குகொண்ட

பொது நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. இவர் மல்லிகாவின் கணவரும், உமா, சந்தூஸ் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். குடும்ப வட்டத்துள் மட்டும் நின்றுகொள்ளாமல் இவர்கள் எல்லோரும் இந்த பொதுப்பரப்புகளில் செயற்பட்டதானது தோழர் பரா அவர்களின் உழைப்பின் மீதான நேர்மையைச் சொல்லிநிற்கிறது. அவரின் பிரிவு தரும் துயரில் இவர்களுடன் பங்குகொள்கிறது ஊடறு. அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

www.padippakam.com





# தனது மரணம் வரை தளராது போராடிய மனிதன்

பி.இரயாகரன், 18.12.2007

பரா தனக்கு சரியென்றுபட்ட கருத்தை தனது வாழ்வின் இறுதிவரை முன் வைத்தவர். போராடுவதில் தனது முதுமையை எட்டி உதைத்தவர். பொது அரசியல் சூழல் அவரை அங்குமிங்குமாக அரசியலில் ஆட வைத்தது. ஆனால் பொதுவான அரசியல் சீரழிவுக்குள் மூழ்காது, தன்னையும் தனது கருத்தையும் காப்பாற்றியவர். நடைமுறை ரீதியாக சூழலுக்குள் இழுபட்டு இயங்கிய போதும், தனது கருத்தை அதற்குள்ளாக ஒருநாளும் விட்டுக் கொடுத்தவர் அல்ல.

பராவை அரசியல் மதிப்பீடு செய்வது என்பது, விமர்சனங்களுடன் உள்ளடங்கியது தான். அவரின் திரோஸ்க்கிய அரசியல் நிலைப்பாடும், தொழிற்சங்க வாதமும், அவரின் இலக்கிய சந்திப்பு தொடர்பான நிலைப்பாடுகளும், இதில் அவரின் சந்தர்ப்பவாதமும் விமர்சனத்துக்குரியதாகவே எப்போதும் இருந்துள்ளது.

இவற்றைக் கடந்தும் அவரின் சில சரியான நிலைப்பாடுகளை மதிப்பிட வேண்டியுள்ளது.

1. சமகாலத்தில் மார்க்சியம் மீதான பொதுவான தாக்குதல், இழிவாடல்கள் எல்லாவற்றையும் மீறி, மார்க்சியம் தான் மக்களின் விடுதலைக்கான ஓரே தத்துவம் என்று மீண்டும் மீண்டும் உரக்கச் சொன்னவர். தனது கருத்துகளை அதற்குள் நின்று முன்வைத்தவர்.

2. ஜனநாயகம் என்பது புலியெதிர்ப்பு என்று வரைவிலக்கணம் பெற்ற நிலையில், அதை அவர் எதிர்த்து நின்றவர். இலக்கியச் சந்திப்பை வெறும் புலியெதிர்ப்பு சந்திப்பாக்க எடுத்த முயற்சிகளை எதிர்த்துப் போராடியவர்.

3. திரோஸ்க்கிய வாதியாக அவர் இருந்தபோதும், ஸ்ராலினிய காழ்ப்புடன் சமூக இயக்கத்தை ஆராயாது, அதன் இயங்கியல் தன்மையுடன் இணங்கிப் பார்த்தவர். இப்படி முற்றாக ஸ்ராலினை எதிர்த்து தூற்றியவரல்ல.

4. சமகால அரசியல் செயற்பாட்டை தனது சுயநலத்துக்காக பயன்படுத்தியவரல்ல. பலர் அப்படிச் செய்த போதும், அவர் தன்னளவில் நேர்மையாக இருக்க முனைந்தவர். அரசியல் சூழல் சார்ந்த தனிமனித எல்லையும், பொது அரசியல் போக்கும், அவர் கொண்டிருந்த திரோஸ்கியப் பாரம்பரிய அரசியலும் தான், அவரின் தவறுகளுக்கு காரணமாக இருந்தது. சாதகமான போராட்ட சூழல் ஒன்று நிலவியிருப்பின், மக்களுக்காக அர்ப்பணித்து போராடக் கூடிய உள ஆற்றலையும், தனிமனித நேர்மையையும் அவர் தன்னளவில் கொண்டிருந்தவர்.

தன் வாழ்வின் இறுதிவரை, வர்க்க போராட்டம் பற்றியே கனவு கண்டவர். இலங்கையின் முழு மக்களும் ஜனநாயகத்தைப் பெறுவதை உணர்வு பூர்வமாக உள்வாங்கி, அதற்காக ஏங்கியவர். வளவளவென்றில்லாமல் கருத்தைச் சொல்வதில் உள்ள திடம் அசாதாரணமானது. இந்த வகையில் தனது முழுக் குடும்பத்தையும், தனது அரசியல் அரங்கில் இட்டுச்சென்றவர். அவர் விடாமுயற்சி உடன் கூடிய உற்சாகம் கொண்ட உழைப்பு, கருத்துப் பிரச்சாரம் செய்வதில் உள்ள திடமான உறுதியான நம்பிக்கை, முதுமையைக் கடந்தும் அவரை இளமையுடன் போராட வைத்தது.

படிப்பகம்

நண்பர்களே,
ஐரோப்பிய நாடுகளில் தமிழ் இலக்கியச் சந்திப்புக்களை ஏற்படுத்தி சாதனைகள் செய்த தமிழ் ஆர்வலர்களில் ஒருவரான திரு பரராஜசிங்கம் அவர்கள்பெர்லினில் (ஜெர்மனி) காலமானார். அதன் தொடர்பான செய்தியினை மின் தமிழ் (minTamil@googlegroups.com)குழுமத்திற்கு இணைத்திருக்கிறேன். திரு பரராஜசிங்கம் அவர்களின் துணைவியாருக்கும் குடும்பத்தாருக்கும்



தமிழ் மரபு அறக்கட்டளை ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.
அன்புடன்
சுபா
+++++++++++++++++++++

**Please convey our deepest sympathies to Mallika and other relatives of Mr. Para Kumarasamy. His loss is paramount indeed especially for the expatriate Tamil community in Europe.**

Shanthi Sachithanandam
Mathusoothanan **(editor, "Aha Vili" "Oalai")**
K. Shanmugalingam **(editor "Koodam", former secretary Ministry of Hindu Cultural Affairs)**
+++++++++++++++++

Photo by Krishna Subramania

**From Sunila Abeysekera:**

# Comrade Para

**It is with great sadness that we learned of Comrade Para's sudden passing. We share the grief of Mallika and Uma and other family members.**

**I first knew Comrade Para and Mallika in the 1970s, through various events and activities linked to the CMU. It was a vibrant moment in our history, with many political discussions, and lasting friendships were built during this time. In later years, I encountered Para and his family in Germany, and elsewhere in Europe, at activities organized to promote peace in Sri Lanka.**

**What I appreciated most about Comrade Para was his sense of decency and humanity, and his unswerving commitment to those qualities. Through all the negative and positive experiences of exile, he maintained his sense of humour, his love of life and his creative energy which was expended on a thousand diverse activities, including writing and publishing the work of Tamil writers throughout the diaspora, and organizing cultural and political activities that, very importantly,linked the youth of the disapora with the adults of their homeland. The Tamil literary conferences that he took the lead to organize are legendary in their creativty and expanse.**

www.padippakam.com

I also appreciated the way in which Conmrades Para and Mallika created a very democratic and household, sharing tasks, respecting the voices of all family members equally and allowing their children the space to grow in Germany without ever feeling alienated from their language, culture and country of origin. This harmony exemplifies the living out of theory in the best of ways.

At a time when the voices of moderation and wisdom in our island are growing lesser by the day, we will surely miss Para's wisdom and laughter.

**Sunila Abeysekera**, Sri Lanka

19.12.07

Photo by Thamayanthi,Norway



**Dear Susee**
**I am deeply grieved over the news of the death of our beloved Para. He held aloft the banner of internationalism and solidarity with the working masses of the world irrespective of their colour, language, country and culture at a time most of those brought up in the left politics either succumbed to the nihilistic philosophy of post-modernism ,identity politics or outright national and cultural chauvinism. I was one of those who had the privilege of enjoying his hospitality, invigorating conversation he would deliberately provoke with a view to learn from his opponents as well as friends. Let me share the grief of all those who have been left behind by him. Hope they would pick up the torch he lighted and serve the humanity.**

**Yours,** S,V.Rajadurai
**Bahrathidasan University, Tiruchirapalli-24**
**Tamil Nadu**

******************************

**Dear Susee and Lionel,**

**I am so saddened by the news of Para's death. Para was a socialist with a broad vision and a deep commitment to the cause he believed in. He remained firm in his conviction and was active to the last. What an admirable person! Please convey my deepest condolences to his wife, children and other members of his family.**

**Sincerely,**
N.Shanmugaratnam,
**Norwa**

படிப்பகம்

www.padippakam.com



**Dear Susee**

**I am quite saddened by this news. Please convey my heart felt condolences to Mallika and Para master's family. Para was a great friend and wonderful human being. I feel privileged to be associated with him during my sojourn in Germany.**

Naa. Kannan, **South Korea**

*******************************

**It is one more moment of losing our good hearted friend. I could feel the lose and share the sorrow of friends and family.**

**Prem,** Delhi, India

*******************************

ஒரு புலத்து இலக்கியத் தந்ததையின் இழப்பு!
புலம்பெயர்ந்த இலக்கிய, அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியில் மிகவும் பரிச்சயமான, மிகுந்த தோழமை அன்பையும் தனக்குரிதாக்கியிருந்த மரியாதைக்குரிய தோழர் பராவின் இழப்பு மீண்டும் ஒரு இழப்பின் வலியை குத்திற்று நிற்கிறது. கடந்த இலக்கிய சந்திப்புகளே அவரது உறவை ஏற்படுத்தியிருந்த போதும் சமூக அரசியற் செயற்பாடுகள் குறித்து சில பல தடைவகள் அவரோடு உரையாடிய சந்தர்ப்பங்களை நினைவுகூர்ந்து பார்க்கிறேன். அவரின் விடாப்பிடியான கொள்கை, அவரின் இலட்சியம், இளமைமிக்க அவரின் செயற்பாட்டு வேகம் எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்தது. புலத்தில் செயற்பட்ட பல்வேறு அமைப்புக்களும் சிறிது காலங்களில் காணாமல் போனபோதும் இலக்கியச் சந்திப்பு இன்றளவிலும் நின்றுபிடிப்பதற்கு காரணமாக இருந்தவர் என்பதை அத்தனை தோழமை உள்ளங்களும் அறிவார்கள்.
ஒரு தந்தையை இழந்தது போன்ற உணர்வை எமக்குள் ஏற்படுத்தியிருக்கிறது தோழர்!
கண்ணீருடன் வழியனுப்புகிறோம்.

என்.சரவணன், நோர்வே

*******************************

**Dear Mallika, Uma and Santhush**

**I was shocked to hear death of Para. I know him well over 15 years period. When he was publishing SINTHANAI in early period, he has included political articles in Sinhala in his Tamil magazine. First time I know him as a progressive left writer. Then I met him at Stuttgart early 90s when I visited Germany as a 4th international representative. He brought me to his house and treated well two nights. Para and his son brought me to air port with my heavy baggage. In that two nights we had deep political discussion including how to solve the ethnic problem in SL. I always feel, he is as an internationalist. He believed ethnic harmony and living together with dignity of Tamils in SL. Recently I read his lecture that was given in Canada.**
**This is the realty of life. Para passed away but his views and ideas are living with us. We have to have for continue that cause. My deepest sympathies extend to Malika, Uma and Santhush.**

**G.V.D.Tilakasiri**.President, FTUDC, Sri Lanka

படிப்பகம்



**Dear Suseendran**
**It is too severe loss. This great soul called by us as "Para Anna" passed away adding to the Angels in Heaven, leaving this Earth crying minus one ..Para Annai is a knowledgeable person with insight and deep sense of responsibility. He is not only knowledgably, but also ever ready and willing to part and share with others. I am ONE of those benefited a great deal from his knowledge; he is the reason and cause which attracted me towards peace, fair play and democracy towards down trodden and needy**
**At this moment of Great Loss our thoughts and prayers are with Malika Akka, Santhosh, Uma and families.**
Somasundaram & family

## Kondolenz

**Zum Tod von K. Pararaasingham:**

**May the road rise to meet you,May the wind be always at your back,May the sun shine warmUpon your face And the rain fall softUpon your fields.And until we meet again May god hold you in the Palm of his hand.**

**-An old Irish verse-**

**Lieber Para,**
**Ich bin dankbar, dass ich mit Dir ein Stück unseres Lebensweges in Berlin gehen konnte, für Deine Begeisterungsfähigkeit und Dynamik, Deinen Optimismus und Dein unermüdliches Engagement als ein exillebender Sri Lankaner.**
**Es ist ungerecht, dass Du uns so früh und unerwartet verlassen musstest. Aber die Spuren von Liebe, die Du hinterlassen hast, bleiben für immer.**

**In Liebe und Dankbarkeit!**

**Ramya, Berlin**

*******************************************************************************************

நேசமுள்ள பரா

எங்கள் வாழ்க்கைப் பாதையில் சில காத தூரத்தை உங்களுடன், ஆர்வமும் சோர்வற்ற ஈடுபாடும் நம்பிக்கைப்பிடிப்பும் கொண்ட புகலிடந் தேடிய ஒரு இலங்கையனுடன் பெர்லினில் கழிக்க முடிந்ததையிட்டு நான் நன்றியுடையேன்.நாங்கள் எதிர்பாராத வேளையொன்றில், இவ்வளவு சீக்கிரமாகவே எங்களைவிட்டு பிரியவேண்டிவந்துவிட்டது அநியாயமானது. ஆனாலும் நீங்கள் விட்டுச் சென்ற அன்பின் சுவடுகள் என்றென்றைக்குமாக நிலைபெறுவன.

றம்மியா, பெர்லின்

## துயரச்செய்தி




பராமாஸ்டர் என அழைக்கப்படும் பரராஜசிங்கம் அவர்கள் நேற்று இரவு தனது 72 ஆவது வயதில் காலமானார். இவர் ஜேர்மனியிலுள்ள பேர்லின் நகரில் தனது புகலிட வாழ்வை மேற்கொண்டு வந்தவர். புகலிட இலக்கியச்சந்திப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் 'சிந்தனை' எனும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவர் இடதுசாரிச் சிந்தனை கொண்டவராகவும் இலங்கையில் பல தொழிற் கட்சிகளின் வேலைத்திட்டங்களிலும் , அதன் போராட்டங்களிலும் பங்குபற்றியவராகவும்இருந்தார்

பராமாஸ்டர் அவர்கள் தலித் சமூகங்களின் துயரங்களில் அக்கறை கொண்டவராகவும் , சாதிய மேலாதிக்க ஒடுக்குமுறைக்கெதிராகவும் போராடிவந்தவர். கடந்த ஒக்டோபர் மாதம் பிரான்சில் நடைபெற்ற தலித் மாநாட்டில் சிறப்புப் பேச்சாளராகவும் பங்குபற்றியவர். தனது உடல் இயலா நிலைமையிலும் மிகச் சிரமத்துடனேயே தலித் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்.

இவரின் திடீர் மரணம் பிரான்ஸ் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி உறுப்பினர்களுக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் பேரதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

## தேசம்நெற் அஞ்சலிகள்



## <u>தேசம்</u>

**தோழர் பராவினருடைய குடும்பத்தின் துயரில் நானும் பங்கு கொள்கிறேன்.**

ஆரூரன்

தோழர் பரா அவர்களின் மரணம் அதிர்ச்சியும் துயரும் தரத்தக்கது. அவரது குடும்பத்தினருடன் இரு நாட்களைக் கழித்த நினைவுகள் துக்கத்துடன் மேலெழுகிறது. அன்பும் உபசரிப்பும் வாஞ்சையும் மிக்க குடும்பம் அவருடையது. தாய்மை போலவே தந்தைமையும் ஈடு செய்ய இயலாதது. தந்தைமையின் பிரிவை மிகச் சமீபத்தில் அனுபவத்தவன் என்பதால் வார்த்தைகளால் ஈடு செய்யவியலாத துயர் பராவின் பிரிவு என்பதனை ஆத்மார்த்தமாக உணரமுடிகிறது. அவரது மைந்தனான சந்துசுக்கும் புதல்வியான உமாவுக்கும் அவரது உற்ற துணைவியரான மல்லிகா அவர்களுக்கும் அவரது பிரிவால் துயருறும் தோழர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

யமுனாராஜேந்திரன்

www.padippakam.com



முற்போக்கு என்பது வியாபாரமாகி விட்ட சூழலில் இறுதி வாழ்வு வரை தன் வாழ்வை ஒடுக்கபட்ட மக்களுக்காகவும் அந்த மக்களின் மனித உரிமைகளுக்காகவும் அர்ப்பணித்த தோழருக்கு என் கண்ணீர் அஞ்சலி. தோழரின் குடும்பத்தார் / உறவினர் நண்பர்கள் / தோழர்கள் அனைவரோடும் சேர்ந்து அவர்கள் துயரில் நானும் பங்குகொள்கின்றேன்.

தர்மன்

*********************************************************************************************

என் கண்ணீர் அஞ்சலி: நண்பர் பரா அவர்களின் மறைவு மிகவும் வேதனைக்கு உரியது. நோய்வாயப்பட்டு இருந்த வேளையிலும் போராட்ட உணர்வு தளர்ந்துவிடாமல் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்க பரிஸ் வரை அவர் வந்த போதே அவரை முதற் தடவையாக சந்தித்தேன். என்றும் மக்களுக்காகப் போராடத் தயாராக இருந்த அந்த இளைஞனை மீண்டும் ஒரு முறை சந்திப்பேன் என்ற நம்பி;க்கையில் அவசரமான ஒரு உரையாடலை செய்வதை நான் தவிர்த்து இருந்தேன். ஆனால் மீண்டும் சந்திக்க முடியாத நிலை உருவாகும் என நான் எதிர்பார்க்கவில்லை.அவருடைய இந்த சீரிய வாழ்வுக்கு என்றும் உறுதுணையாக இருந்த அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எனது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

த ஜெயபாலன்

*********************************************************************************

நான் பரராஜசிங்கம் பற்றி அறிந்தவைகளைவிட அறியாதவைகளே அதிகம். நல்ல மனிதரும் இடதுசாரியும் என்று கேள்விப்பட்டிருந்தேன். இப்போது நாபா அணியினரின் இரங்கலை வாசிக்கிறபோது அவரைப்பற்றி மேலும் அறியமுடிகிறது. அவரது மறைவின் துயரத்திலும் அன்னாரின் குடும்பத்தார் ஆறுதல் அடையக்கூடிய விடயம் ஒன்று உள்ளது. அவர் நிறைவான வாழ்வு வாழ்ந்து மறைந்திருக்கிறார் என்பதே அது.

-நட்சத்திரன் செவ்விந்தியன், சிட்னி.

திரு. பரா அவர்களின் மறைவு அதிர்ச்சிதரவில்லை. ஆனாலும் மனது கசிகிறது. பொதுவாழ்விற்காக தன்வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்த ஒரு மென்மையான மனிதர். தனது கடைசிக்காலம் வரை தன்து சிந்தனையை நிறுத்தாது தொடர்ந்து வந்தவர். சகல ஜனநாயக போர்க்குரல்களிலும் ஆர்வத்தோடு உற்சாகமாய் கலந்து தனது பங்களிப்பை வழங்கி வந்தவர். பெறுமதி மிக்க ஒரு மனிதரின் இழப்பு கவலையைத் தருகிறது. குடும்பத்தினர் நண்பர்களுடன் எனது துயரைப்பகிர்ந்துகொள்கிறேன்.

-மனோ

படிப்பகம்

www.padippakam.com



தோழர் பராவை சந்திக்கும் எந்த வாய்ப்பும் எனக்கு கிடைத்திருக்கவில்லை. ஆயினும் அவரைப் பற்றி நண்பர்கள் ஊடாக அறிந்திருந்தேன். அவரது; ஜனநாயகத்திற்கான போர்க்குரல் இன்று அமைதியாகிவிட்டது எமது சமூகத்திற்கு ஒரு பேரிழப்பே. அவருக்கும் நாம் செலுத்தும் அஞ்சலி அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்வதே! துயரங்களை பலமாக மாற்றி கொண்டு அவரது நம்பிக்கைகளை வென்றெடுப்போம்.

-தக்ஷஷன்

+++++++++++++++++++++++++++++++++++++

